ஸ்ரீ ராமாயணக் கதைகள்



கி.மா.பக்தவத்சல

No 5

இராமாயணக் கதைகள்

(இரண்டாம் புத்தகம்)

கி. மா. பக்தவத்சலன்

வள்ளுவர் பண்ணை
137, பிராட்வே -, சென்னை.1

குழந்தைகள் தின வெளியீடு

வெளியீடு 83
முதற்பதிப்பு நவம்பர் 1961

விலை ரூபாய் ஒன்று

அச்சிட்டோர்
ஜீவன் அச்சகம்
சென்னை-5.

முன்னுரை

இராமாயணம் — வெறும் கதையல்ல. நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னுல் இந்த நிலவுலகில் நடமாடியவர்களின் மனப்பண்பு, வாழ்க்கை நிலே, அரசியல் நெறி இவைகளே அறிந்து; அறிந்தவற்றிலிருந்து இன்றுள்ளவர் அறியாதனவற்றிற்கு உரிய வழி வகைகளே அறிய உதவும் இந்த வரலாறு, உலகப் புகழ் பெற்று விளங்குகின்ற பெருங் காவியங்களுள் ஒன்ருகும்.

நாளே இந்த நாட்டின் சிறந்த குடிமக்களாக விளங்கப்போகும் இன்றைய சிறுவர்கள் வாழ்க்கையில் தமக்கு உரிய கடமைகளேச் செய்து, பிறருக்குரிய உரிமைகளே வழங்குவதற்கு எடுத்துக்காட்டு வேண்டுமென்ருல், மூத்தோர் 'வாழ்வு — வாக்கு' என்னும் இரண்டைத்தான் தேடுகிருேம். இந்திய நாட்டு இதிகாசங்களில் இறவாத புகழுடையவை இரண்டு. ஒன்று இராமாயணக் கதைகள்; மற்ருென்று பாரதக் கதைகள்.

'பொய்யில் கேள்விப் புலமையினுர் புகழ்
தெய்வ மாக்கதை மாட்சி தெரிவிக்கவே'

எனக்குக் கிடைத்த வாய்ப்பினை நான் பெற்ற பேறுகளிலெல்லாம் பெரிதெனமதிக்கின்றேன். இவ்விருநூல்களையும் சிறுவர் இலக்கியத்திற்கு அளித்திடும் தொண்டினை எனக்களித்து ஊக்குவித்த வள்ளுவர் பண்ணை உரிமையாளர் திரு. ந. பழனியப்பன் அவர்கள் என் கண்ணிலும் கருத்திலும் நாவிலும் எப்பொழுதும் இருக்கின்றார். வள்ளுவர் பண்ணை மேற்கொண்ட இப்பணி பாராட்டற்குரியது. தமிழகம் இதனை ஏற்று பண்பும் பயனும் அடைவதாக.

வணக்கம்.

'சந்திரோதயம்' அன்பன்,

சென்னை-21. கி. மா. பக்தவத்சலன்.

இராமாயணக் கதைகள்

மந்தரை சூழ்ச்சி

அயோத்தியில் இராமனும் சீதையும் ஆனந்த மயமான வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தனர். இருவரும் ஒருமனப்பட்டு எந்த நிலையிலும் மாருத அன்புடையவர்களாய் இருந்தார்கள்.

கேகய நாட்டு அரசன் தனது பேரன் பரதனைப் பார்க்க ஆவல் கொண்டிருப்பதாகத் தசரத மன்னனுக்குக் கொஞ்சகாலத்துக்குமுன்னமேயே சொல்லி அனுப்பியிருந்தான். ஒருநாள் பரதன், தசரதன் இராமன் முதலானவர்களிடம் வணங்கி விடை பெற்று கேகய நாடு போய்ச் சேர்ந்தான்.

தசரத மன்னன் தன் உடல் மூப்பினுல் தளர்ந்து போயிருப்பதாகக் கருதினுன். இன்னும் பல ஆண்டுகள் ஆட்சி பீடத்திலிருக்க அவன் உள்ளம் சம்மதிக்கவில்லே. தசரதன் தன்னுடைய நான்கு பிள்ளேகளிடத்திலும் அளவுகடந்த பிரியம் கொண்டிருந்தான். ஆயினும் மூத்த மகன் இராமனிடத்தில் அதிக அன்புண்டு. ஆட்சி பொறுப்பை அவனிடம் ஒப்படைப்பது நல்லது என்று தசரதன் எண்ணினுன். எவ்வித கால தாமதமுமின்றி ஆட்சிப் பொறுப்பை அவன் ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று தசரதன் தீர்மானித்தான்.

அதற்குமேல் தசரத மன்னன் சிந்தனேயில் ஆழ்ந்திருக்கவில்லே. ஆட்சிப் பொறுப்பை இராமனிடம் ஒப்படைப்பதற்குத் தகுந்த சூழ்நிலேயை உருவாக்க மந்திராலோசனே செய்யும் சபா மண்டபத்துக்குச் சென்ருன். அமைச்சர்களே வரவழைத்து தன் விருப்பத்தை எடுத்துரைத்தான்.

"என் உணர்வு அனேய அமைச்சர்களே! உங்கள் மாட்சியால் இந்த ஆட்சியை என் முன்னேர்களேப் போலவே நானும் திறம்பட நடத்தி வருகிறேன். ஆயினும், இன்னும் எவ்வளவு காலம் தான் இவ்விதம் நான் இருக்க முடியும்; சொல்லுங்கள்? இப்போது என் உடல் மூப்பினுல் தளர்ந்து போயிருக்கிறது. அரசனுகி, ஆட்சிப் பொறுப்பைச் சுமந்தது போதும் போதுமென்ருகி விட்டது. தனிமையை நாடிச் சென்று என்னுயிர்க்கு உறுவது செய்ய விரும்புகிறேன். கடைசிக் காலம் வரை என் முன்னேர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததில்லே. நானும் அவர்களின் வழியைப் பின்பற்றி மிகுதியுள்ள என் வாழ்நாளே

தவம் செய்து கழிக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறேன். என் மூத்த மகன் இராமனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நான் கவலையற்று மிகுதியுள்ள என் வாழ்நாளை வனத்தில் கழிக்க விரும்புகிறேன். இராமன்—குடும்பத்தின் மூத்த மகன்! அசையா நெஞ்சும் உயிரெலாம் இன்புற்றிருக்க அருளும் குணமும் கொண்ட இளங் குமரன்! புண்ணிய வேள்வியில் பிறந்தவன்! உயர் புகழிலும் மதியிலும் சிறந்தவன். எவ்விதக் கால தாமதமுமின்றி தேவர்க்கெல்லாம் தேவன்—என் மூத்த மகன் இராமனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விடுவது என்று நான் முடிவு செய்துள்ளேன். என் எண்ணத்தை அவையிலுள்ள அறிவிற் சிறந்த ஆன்றோர்களும் அமைச்சர்களும் பெருங்குடி மக்களும் ஆதரிப்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.''

அதுவரை தசரத மன்னனை நோக்கிய வண்ணம் மௌனமாக அமர்ந்திருந்த அமைச்சர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். தசரத சக்கரவர்த்தி கோசல நாட்டின் புகழைப் பன்மடங்காக அதிகரிக்கச் செய்ய—குடிமக்களின் நலனைக் காப்பாற்ற எடுத்துக்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் தங்கள் பூரண ஆதரவைத் தருவதாகத் தெரிவித்தனர்.

இதைக்கேட்டு தசரதன் ''பெருமகனுக்கு மன்னனாக மகுடம் சூட்ட வேண்டுமென்று பேரரசர் சொல்கிறார்; பேசுவதற்கென்ன இருக்கிறது என்று கருதுகிறீர்களா? மதிப்பிற்குரிய அமைச்சர்களே! பெருங்குடி மக்களே! உங்கள் கருத்து என்ன? நான் சொன்னதை நீங்கள் அப்படியே ஒப்புக்

கொண்டுவிட்டதில் எனக்குத் திருப்தியில்லை" என்று சொன்னான்.

வசிட்ட முனிவர், "அரசனே! உன் குல முன்னோர்கள் செய்தபடிதான் நீயும் மூத்த மகன் இராமனுக்கு முடி சூட்டிவிட்டு, பிறப்பும் அதைச் சேர்ந்த இறப்பும் இல்லாத நிலை பெற மாதவம் இருக்க விரும்புகிறாய்! வனம் சென்று தவம் செய்ய விரும்பும் வயதுதான் உனக்கு. இராமன் இருப்பதால் துறவு பூண வாய்ப்பும் இருக்கிறது. உன் முன்னோர்களைவிட நீ மேலான பாக்கியம் செய்தவன். பெருமை எய்தினாய்—இராமனைப் பெற்றதாலே! திருமகள் சீதையை இராமன் திருமணம் செய்து கொண்ட காட்சியைக் கண்டு களித்த நீ காலத்தில் அவனை மன்னன் கோலத்திலும் காண வேண்டும் என்று விரும்புவதும் இயல்பானதே. மகனுக்குத் தான் இருக்கும்போதே நிர்வாகப் பயிற்சி அளிக்க இந்தத் திட்டம் நன்மை தருவதாகும். குடிகளது நன்மையைக் கருதினாலும் நீ செய்ய வேண்டிய கடமையும் இதுவேயாகும்" என்று சொன்னார்.

பிறகு தசரத மன்னனுக்குத் தேர்ப்பாகனும் துணைவனுமான சுமந்திரன் பேசலானான்: "இராமன் கண்ணியம் மிக்கவன். கண்ணிலும் சால இனியவன்! வண்ணமும் திண்மையும் சோதியும் பெற்ற வானத்தமரரைப் போன்றவன். கல்வியைப் போல் அறிவும் அறிவினைப் போலக் கருணையும், அக்கருணையைப் போல பலவித ஊக்கங்கள் செய்யும் திறனுமொரு நிகரின்றிப் படைத்த வீரன். இரகு வம்சத்தின் பெருமைக்கு ஒளி விளக்காகத் திகழ்வான். இராமனுக்கு அரசியல் அறிவும் இருக்க

வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுவது எவ்வளவோ சிறந்ததுதான்.''

மற்றவர்களும் எழுந்து இராமனுடைய அருங் குணங்களையும் ஆற்றலையும் விரிவாக எடுத்துரைத்தார்கள். அதனைக் கேட்க தசரதனுக்கு அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே முடிசூட்டும் விழாவுக்குரிய எல்லா ஏற்பாடுகளும் செய்ய உத்தர விட்டான். சுமந்திரனிடம் இராமனை அழைத்து வரச் சொன்னான். இராமன் விவரம் தெரியாதவனாக சுமந்திரனுடன் புறப்பட்டு சபா மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். அவையிலிருந்த வசிட்டர், வாமதேவர் முதலிய பெரியோர்களை வணங்கி, தந்தையின் அருகில் சென்று நின்றான். அரசுரிமையைத் தான் ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தான் இராமன். ''தங்கள் கட்டளை எதுவோ அதன்படி நடக்க நான் கடமைப்பட்டவன்'' என்றான். இராமன் சொன்னதைக் கேட்டு அவையிலிருந்தவர்கள் மன நிறைவோடு மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தார்கள்.

தசரதன் இராமனை அன்போடு தழுவிக் கொண்டு ''பிரிய குமாரனே! உனக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. சிறந்த வீரனும் சூரியனைப் போன்ற ஒளியும் அழகும் பொருந்தியவனும் மனவுறுதியும் கல்வி அறிவும் பெற்றுள்ள உன்னால் இந்த நாடு மேலும் பெருமையடையும் என்பதில் எனக்கு ஐயமில்லை. இராமனே! நாளையதினமே முடிசூட்டு விழா நடப்பது நல்லதென்றும் கருதுகிறேன். ஏனெனில் எனக்கு வயது அதிகமாகி விட்டது. ஆதலால் இதை உடனே செய்து முடிக்க

வேண்டும். இப்பொழுது முதலே நீயும் சீதையும் விரதம் இருங்கள்" என்று கூறினுன்.

அரசு கட்டிலேறுவதில் துயரமும் தொல்லைகளும் உண்டென்று அறிந்தாலும், தனக்கு அது ஒரு கடமை என்பதால் தந்தையின் கட்டளைக்கு இணங்கினுன். இதில் இராமனுக்கு விருப்பமும் இல்லை; இதனை அவன் வெறுக்கவும் இல்லை. அவ்வாறே செய்வதாகக் கூறி சீதை இருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தான்.

அயோத்திமா நகரம் விழாக்கோலம் கொள்ள ஆரம்பித்தது. சபா மண்டபம் வெகு அழகாக நிருமாணிக்கப்பட்டது. ஆலயத்தின் வாசல் கதவின் மீதிருந்த மணிகள் கணகண வென்று ஒலித்த வண்ணமிருந்தன. வீடுகளனைத்தும் மாயிலைத் தோரணங்களும் மாக் கோலங்களும் கொண்டு விளங்கின. துந்துபிகள் முழங்கின. கருடக் கொடிகள் எங்கும் காட்சியளித்தன. மறுநாளே முடிசூட்டு விழா நடக்கப்போகிறது என்று தெரிந்ததும் மக்கள் ஆனந்த வெறி கொண்டு அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்தார்கள். பெரியவர்களைக் கண்டவுடன் மரியாதையாக வணங்குகிறவர்கள் கூட பரபரப்பில் ஒருவரோடொருவர் இடித்துக் கொண்டு போனுர்கள். அந்தப்புரத்தி லிருந்த பெண்கள் இராகமும் தாளமும் தவறிடப் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தார்கள். சிலர் கோசலை இருந்த பக்கமாகச்சென்றனர். தொண்டை மலரைப் போல் சிவந்த வாயுடைய அந்தப் பெண்கள் கோசலையிடம், "தங்களரும் மகனிடம் சக்கரவர்த்தி பரம்பரையாய் வந்த முடியை என்

னைப்போலவே நன்ருகத் தாங்குக!'' என்றுராம்மா என்று தெரிவித்தார்கள்.

அதைக் கேட்டு கோசலை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினுள். மங்கள செய்தியைச் சொன்னவர் களுக்குப் பரிசுகள் கொடுத்து அனுப்பினுள். இராமனும் அங்கு வந்து தந்தை இட்ட ஆணையைத் தெரிவித்தான். 'எல்லா நற்குணங்களுக்கும் இருப் பிடமாகிய நீ தர்ம ஒழுக்கத்தை நடத்திக் காட் டவே உன் தந்தை இந்த ஆணையிட்டிருக்கிருர் என்று எண்ணுகிறேன். வானவன் குலத்து எம் வரத்தில் வந்த கார்மேனியனே! முடிவில்லாமல் புகழ்ந்து கொண்டே இருக்கவல்ல செயலாற்றி உன் தந்தையை மகிழ்விப்பாய்! உனக்கு மங்களம் உண்டாகட்டும்!' என்று சொல்லி மகனை வாழ்த்தி ஞள்.

முடிசூட்டு விழாவைக் காண மக்கள் திரண்டு வந்து அயோத்திமா நகரை மொய்த்தனர். வீதியின் இரு பக்கத்து வீட்டின் மாடிகளிலும் நிறைந்து பொன் ஆரங்களையும் வாசனைப் பொருள்களையும் பூக்களையும் மாசற்ற முத்துக்களையும் தூவி மகிழ்ச் சியால் கூச்சலிட்டார்கள். அயோத்திமா நகரத் தின் அழகைப் பார்த்த தேவர்களோ, வானுலகம் மாதிரியே இருக்கிறதே; நாம் இன்னும் அயோத் திமா நகருக்கு வரவில்லையோ இன்னும் தேவ லோகத்திலேயே இருக்கிருேமே என்றெண்ணி ஆச்சரிய முற்று நின்ருர்கள்.

எங்கு பார்த்தாலும் கொடிகளும் தோரணங் களும் அலங்காரமாகக் கட்டப்பட்டிருந்தன. தேர்க ளெல்லாம் தேவர்கள் விமானம் போலவும், வீர பட்டங்கட்டியிருக்கிற யானைகள் சூரியனை எதிர்க்

கிற உதயகிரி போலவும் தெருக்களில் திரிந்தன. மலர்களும் வண்ணப் பொடிகளும் மனித நெருக்கத்தினுல் இற்று விழுந்த முத்தும் பொன்னுபரணங்களும் வீதியெல்லாம் நிறைந்திருந்தன.

இந்நிலையில் கொடுமையையுடைய கூனியென்பவள் இராமன் பட்டத்துக்கு வரத் தகுந்த ஏற்பாடுகள் கோலாகலமாகச் செய்யப்படுவதைக் கண்டபோதெல்லாம் மனம் துடிக்க, கண்களில் தீப்பொறி பறக்க ஆங்காரம் கொண்டாள். இவள் கைகேயினுடைய வளர்ப்புத் தாய். இவள் பெயர் மந்தரை. அரச குல வழக்கத்தையனுசரித்து கைகேயிக்கு வளர்ப்புத் தாயாக கேகய அரசனுல் அனுப்பி வைக்கப்பட்டவள். அதனுல் கைகேயி மந்தரை இடத்தில் அன்பும் மதிப்பும் வைத்திருந்தாள். அவள் மகன் பரதன் அரசனுக வேண்டும் என்பது கூனி மந்தரையின் ஆசை. இராமனது முடிசூட்டு விழாவுக்கு இத்தனை அலங்காரமும் ஆரவாரமுமா ?

மந்தரை மறந்துபோன சம்பவமொன்று நினைவுக்கு வந்துவிட்டது. இராமன் சிறுவனுக இருந்தபோது ஒருநாள், சிறுவர்களுடன் சேர்ந்து களிமண் உருண்டையை வில்லில் வைத்து எய்து விளையாடிக் கொண்டிருந்தான். இளைஞர் கும்மாளங்களுக்கு இடையில் கூனி மந்தரை அந்த வழியாக வந்தாள். தோழர்களோடு கும்மாளம் போட்டுக் கொண்டிருந்த இராமன் கூனியின் முதுகின்மேல் விளையாட்டாகக் களிமண் உருண்டையை வில்லில் வைத்து எய்தான். கூனி மந்தரை துடி துடித்துப் போனுள். அந்தப் பகையை நினைவுக்குக் கொண்டு வந்தாள் மந்தரை. தன்னை அடித்துக் கேவலப்

படுத்திய இராமனைப் பழிக்குப் பழிவாங்க நினைத்தாள். மனதில் புழுங்கி, பெருமூச்சுவிட்டு பரபரப்புடன் கைகேயினிடத்திற்குப் போனாள்.

அந்த அந்தப்புரம் எப்போதையும் விட அதிக அழகு பெற்று விளங்கியது. கைகேயி பாற்கடலில் பவளக்கொடி தாமரை மலர்களை ஈன்றது போல், வெண்மையான பட்டு மெத்தையின்மேல் மலர்களைப் போல் அருள் வழியும் கண்களை மூடி நித்திரை செய்து கொண்டிருந்தாள்.

அங்கு வந்த கூனி, அவளுடைய தாமரை மலர் போன்ற பாதங்களைத் தன் கரங்களினாலே பிடித்து விட்டாள். கால்களைத் தொட்ட மாத்திரத்தில் கைகேயி தூக்கம் கலைந்து, இதழ்கள் விரிந்து மெது வாக மலர்கிற தாமரை மலரைப்போல விழிகளைத் திறந்தாள்.

“மூட மகளே! எழுந்திரு! எழுந்திரு! ஆபத்து வந்துவிட்டது! இந்த நேரத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறாயே? எழுந்திரு! மூட மகளே! நான் பார்த்ததையும் கேட்டதையும் சொல்ல எனக்கு வாய் எழவில்லை. ஆனாலும் உன்னை வளர்த்த தாய் அல்லவா? எல்லாவற்றையும் செய்து முடிக்கும் விதியே வந்து சொல்லிவிடு என்று என்னைத் தூண்டுகிறது” என்றாள் கூனி.

இதைக் கேட்ட கைகேயி, “அம்மா! பகைவர்கள் நடுங்கும்படியான மிகுந்த வல்லமை உள்ளவரும் அழியாத பேரறமும் பெரும்புகழும் உடையவருமான கணவரையும் அறம் செய்த அறத்தால் நீதியின் உருவமாகப் பிறந்த குமாரர்களும் இருக்க எனக்கு ஆபத்தேன் வருகிறது?” என்று சொன்னாள்.

கூனி கோபத்தோடு ஆசனத்தைவிட்டு எழுந்தாள். கைகேயியை ஏசினுள். இராமனுக்கு நாளை பட்டாபிஷேகம் செய்யப்போகின்ருரே! உன் மாற்ருளான கோசலை தன் மதியினுல் தனக்குப் பெருவாழ்வைப் பெற்றுக் கொண்டாளே. இனி உன் நிலைக்கு இழுக்கு ஏற்படும். இதை எண்ணிப் பார்த்தாயா?'' என்று கூறினுள் கூனி.

கைகேயி மிகக் கோபத்தோடு மந்தரையைக் கண்டித்தாள். "இராமன் பட்டத்துக்கு வருகிருன். இதைவிட வேருென்ரு எனக்கு வேண்டும்!'' என்று அளவுகடந்த மகிழ்ச்சி கொண்டாள். உடனே தன் கழுத்தில் அணிந்திருந்த இரத்தினுர மொன்றை எடுத்து கூனியின் கழுத்திலே போட்டாள். கூனி தன் கண்களில் நெருப்புப் பொறி பறக்க விழித்துப் பார்த்து, பெருமூச்சொறிந்து, அழுது, தன் கழுத்தில் போட்ட ஆரத்தைக் கழற்றித் தரையில் எறிந்தாள். "கைகேயி! நீ பேதை! உன் வயிற்றில் பிறந்த மகன் பரதன் எங்கே இருக்கிருன். அவன் இருப்பதும் இல்லாததும் ஒன்றுதான். சீதையும் இராமனும் சிங்காதனத்தில் இருக்க, பரதன் தரையில் இருப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். எப்பேர்ப்பட்ட ஞானிகள் மனங்கூடச் செல்வம் பெற்றதும் மாறிவிடுகிறது. கோசலை வீட்டார் கொடுமை செய்ய மாட்டார்களா? உன் மனம் தானே நலியும்படி காரியங்கள் நடக்கும். இராமனுக்குப் பட்டம் என்ருல், கோசலைக்குத்தான் எல்லாம் சொந்தம். உனக்கு உரிமை இந்த நாட்டில் ஒன்றும் இல்லை. கோசலையை எதிர்பார்த்து நீ எதையும் செய்ய வேண்டும். அவளாகப் பார்த்து உனக்கு எதைக் கொடுப்பாளோ அதுவே உனக்குச் சொந்த

மானது. உன்னைச் சேர்ந்தவர்களை, வறுமை வாட்ட உன் உதவியை நாடி வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்; அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்கு உன்னிடத்தில் என்ன வழியிருக்கிறது? வகை இருக்கிறது? கோசலையிடம் போய்த் தானே கேட்க வேண்டும்! பிச்சை எடுத்து பிச்சை கொடுக்க வேண்டும். பரதனைப்பாட்டனார் வீட்டுக்குப் போகச் சொல்லி அனுப்பினது எதற்காகவென்பதுஇப்போதல்லவா எனக்குத் தெரிகிறது! அப்பா, பரதா! எங்கேயடா இருக்கிறாய்? நீ பூமியிற் பிறந்தும் பிறவாதவனானாய்!பேரரசரின் மகனாய் நீ பிறந்ததினால் என்ன பிரயோசனம்? உனக்குத் தாயும் பொல்லாதவள்; தந்தையும் பொல்லாதவர்! நீ என்ன செய்வாய்? கைகேயி! நீ அரசர் வீட்டில் பிறந்தும், அரசர் வீட்டில் வளர்ந்தும், அரசர் வீட்டில் புகுந்தும் உனக்கு இவ்வளவு கூடத் தெரியாதா? உன் மகன் அரசனானால் அதனாலே நீ பெருமை அடையலாம். உன் பசிக்கு நீயல்லவா உண்ண வேண்டும்! நான் உண்பதால் உனக்கென்னம்மா நன்மை? சொன்னாலும் கேட்கவில்லை. உனக்கும் தெரியவில்லை. பரதனுக்கு உள்ள கல்வியறிவும், வலிமையும், வீரமும், இளமையும் அருங் குணங்களும் காட்டில் காய்ந்த நிலவு போல் ஆகி விட்டதே!'' என்று அழுது துடித்தாள்.

கைகேயி இதையெல்லாம் கேட்டு மிகவும் வியப்படைந்தாள் அவள் மந்தரையைப் பார்த்து, 'சூர்ய குல மன்னர்கள் தர்மமும் நீதியும் தவறாத முறையில் தங்கள் இராச்சியத்தை ஆண்டு வருகிறார்கள். இராமன் குணஞ் செயல்களில் சிறந்தவன். பெரிய வீரன்; பல அரக்கர்களை வென்ற

வன். சக்கரவர்த்தி தனக்குப் பிறகும் இந்த நாடு மிகமிக உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றார். எனவே, இராமனுக்கு கோசல நாட்டு அரச பதவி கிடைக்கும்படி செய்திருக்கிறார். நீயும் நானும் இந்நிலவுலகில் உள்ள ஒவ்வொரு வரும் இதைக் கேட்டு மகிழவேண்டும். இராமன் இந்நாட்டு மன்னனாக வந்தால், இந்நாட்டின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும். கோசல நாட்டின் தர்மமும், சூரிய குலத்தின் செம்மையும் உலகம் முழுவதும் பரவும். இதை நீ விரும்பவில்லை என்பதை உன் முகக் குறிப்பிலிருந்து நான் உணர்ந்துகொண் டேன். மந்தரா! இதை வாயினாலே சொல்ல எப்படித் துணிந்தாய்? நீ எனக்கும் நல்லவளல்ல; என் மகன் பரதனுக்கும் நன்மை செய்பவளல்ல. இதை வேறொருவர் வந்து என்னிடம் சொல்லியிருந்தால் அவர்கள் நாக்கை அறுக்கக் கட்டளையிட்டிருப் பேன். நீ எங்கள் தாய் வீட்டுத் தாதியானதால், பொறுத்துக் கொண்டேன். புத்தி இல்லாதவளே, இனிமேல் இப்படிப் பேசாதே!" என்று மிகவும் கோபமாகச் சொன்னாள்.

கூனி மந்தரை கைகேயியின் கோபத்தைக் கண்டு கொஞ்சமும் அஞ்சவில்லை. பொதுப்படை யாக தெளிவாகவும் நுட்பமாகவும் பேச ஆரம்பித் தாள்: "உண்மையான பரிவோடு உன் பிற்கால நன்மையை உணர்ந்து என் மனதில் தோன்றி யதைச் சொல்லுகிறேன். ஒரு மன்னனுக்குப் பிறகு, அவன் மூத்த மகன் தானே பட்டத்திற்கு வர வேண்டும்! மூத்தவன் இருக்க இளையவனுக்குப் பட்டம் கட்டுவது நீதியோ? நேர்மையோ? கூடாது. கூடாது. முறை தவறியது. சூரிய குலத்

தில் பிறந்தவர் பண்புக்கே எதிரானது என்றெல்லாம் நினைக்கிருய்! மூத்தவன் இருக்க இளையவனுக்கா பட்டம்! அண்ணன் இருக்கத் தம்பி அரசனுவது ஆகக்கூடியதா? என்று நீ எனக்கு அறிவுரை கூறுகிருய்! மூடமகளே! இராமன் பட்டம் பெற்ற பின் பெருமையடைபவள் கோசலை! இப்போது இராமனையும் கோசலையையும் நல்லவர்களென்றல்லவோ நீ நினைத்துக் கொண்டிருக்கிருய்! அவர்களே நாளை உனக்கு துயரமும் தொல்லைகளும் கொடுக்கலாம். இராமன் அரசனுனல் நீயும் உன் பரதனும் கால முழுவதும் ஏவல் புரிபவராகவும் எது வேண்டுமானுலும் அவர்களிடம் கேட்டு வாங்கிப் பிழைப்பவராகவும் இருக்கும்படியாகும். இராமன் அரசு கட்டிலேறினுல் அத்துடன் பரதனுடைய ராஜவாழ்க்கை முடிந்தது. இராமனுக்குப் பிறகு அவனுடைய மூத்த மகன்; அவனுக்குப் பிறகு அவனுடைய மூத்தமகன்—இப்படியாக இந்த நாடு அவர்களுக்குப் போகும். ஒரு அரசனுக்குப் பிறந்தவன் என்பதைத் தவிர உன் மகன் பரதன் அடையப் போவதெதுவுமில்லை. உனக்கும் உன் மகன் பரதனுக்கும் இந்த நாட்டில் எதுவும் இல்லை. இது ஏன் உனக்குக் கொஞ்சமும் தெரியவில்லை. எப்படி வாழ்வாய்! சொல்லடியம்மா? சொல்லடி!”

இதைக் கேட்டுக் கைகேயி மனம் தளர்ந்து போனுள். மந்தரை சொல்வதில் தவறென்ன இருக்கிறது! ‘பரியும் நின்குலப் புதல்வற்கும் உனக்கும் இப்பார் மேல் உரியதென்ன? அவள் உதவிய பொருளல்லால்’ என்பன அவள் எதிர்கால நிலையை எவ்வளவு பொருத்தமாகச் சித்தரித்துக்

காட்டுகின்றன. வேறு வழியில்லை. “இப்போது நான் செய்ய வேண்டியது என்ன?” என்று மந்தரையிடம் கேட்டாள்.

அது கேட்ட கூனி, “என் கண்மணி! எப்படியாவது பரதனுக்குப் பட்டம் கிடைக்கும்படி செய்து விடு” என்று கூறினுள்.

“அம்மா! பரதன் எனக்குப் பிள்ளையானபடியினுல் உனக்கும் பிள்ளை தான். அவனுக்குப் பட்டம் கிடைப்பதற்கு நீயே ஒரு வழி சொல்” என்று கேட்டாள் கைகேயி. மந்தரை வெற்றிக் களிப்பில் மகிழ்ச்சி கொண்டு “நான் சொல்வதைக் கேள். புதிதாக நாஞென்றும் சொல்லப் போவதில்லை. தசரத சக்கரவர்த்தி உனக்கு முன்ஞெரு காலத்தில் வாக்களித்திருந்த வரங்களை நினைப்பூட்டுகிறேன். சம்பாசுரனைப் போரில் வென்றபோது ஒரு விழா நடத்திஞரல்லவா தசரதர்? அந்த வெற்றிக் களிப்பில், தனக்குச் சாரதியாய் இருந்த உனக்கு இரண்டு வரம் கொடுக்கிறேன் என்று சொல்லியிருந்தாரே! ‘எப்பொழுதோ நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வந்து விடுகிறது அல்லவா? அந்தப் பழைய சம்பவம் இன்று உனக்கு உதவி செய்கிறது. அதை நினைவூட்டிக் கொள். அந்த இரண்டு வரங்களையும் இப்போது நீ பெறவேண்டும்! கண்மணி! இருவரத்திஞல், ஒன்றிஞல் பரதனுக்குப் பட்டங் கட்டவேண்டும். மற்ருென்றிஞல், இராமனை பதினுன்கு வருடம் காட்டுக்கு அனுப்பி விடவேண்டும். கொஞ்சமும் யோசியாமல் இந்த இரண்டு வரங்களைக் கேள்” என்று கூறினுள். கூனி மந்தரை இவ்விதம் சொன்னதும் தேவி தூய சிந்தையும் திரிந்தது.

கூனியை மார்புடன் தழுவிக் கொண்டு கைகேயி சொன்னாள். "சரியான உபாயந்தான்! இந்த இரண்டு வரமும் எனக்கு கொடுக்கா விட்டால், அவர் முன்னிலையிலேயே உயிரை விட்டு விடுகிறேன். நீ போ!

கூனி மந்தரை அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தாள். பிறகு தன்னிடத்துக்குப் போனாள்.

கேட்டது கொடுத்தான்

கைகேயி முன்னொரு சமயம் தசரதர் தனக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்களையும் பெற பொய் பிணக்கம் காட்டித் தன்னை அலங்கோலப் படுத்திக் கொண்டு தரையில் விழுந்து கிடந்தாள்.

முடிசூட்டு விழாவுக்கான காரியங்களையெல் லாம் முடித்து விட்டு, நள்ளிரவு நேரத்தில் தசரத மன்னன் கைகேயி தேவியினுடைய அந்தப்புரத்தை வந்தடைந்தான். 'வாழ்க' வாழ்க!' என ஆர வாரித்துக் கொண்டு வந்த அரசர்கள், வாசலி லேயே நின்று விட்டார்கள். பெருமகிழ்ச்சியோடு தசரதன் உள்ளே போனான்.

அவன் கண்டதென்ன? ஆபரணங்கள் அங் கொன்று இங்கொன்ருகச் சிதறிக் கிடக்கின்றன. முத்துச் சரங்கள் தொங்கின. மேகலைச் சங்கிலி அறுந்து கிடந்தது. வேர் களைந்து எறியப்பட்ட கொடி போலவும், சுவர்க்கத்திலிருந்து புண்ணியத் தின் முடிவில் தள்ளப்பட்ட தேவதை போலவும்,

கீழே விழுந்து விட்ட தேவகன்னிகை போலவும், கைவளை இரத்தினுபரணங்களை யெல்லாம் கழற்றி எறிந்து, திலகத்தை அழித்து, வளைந்து சுருண்டு கிடக்கும் தன் கூந்தல் பூமியின் மேல் புரள விரித்துக்கொண்டு, கண்ணில் தீட்டிய மை கரைய அழுது, 'பூவுதிர்ந்த கொம்பு போலவும், தோகை யுதிர்ந்த மயில் போலவும், வளையிலகப்பட்ட பெண் மான் போலவும், ஒரு வேடன் விடுத்த அம்பால் தைக்கப் பட்டு வெருண்டோடிய பெண் யானை போலவும் தரையிலே விழுந்து கிடந்த கைகேயியை தசரதன் பார்த்தான்.

துடிதுடித்துப் போய், மத யானை துதிக் கையினுல் மானைத் தூக்கி எடுப்பது போல், அவளைத் தூக்கி யெடுத்து, மதயானையானது தனது பிடியைக் கண்டால் எவ்வாறு தடவிக் கொடுக்குமோ அது போலத் தமது கைகளால் தடவிக் கொடுத்து அவளிடம் அன்போடு கேட்டான். "தேவி, உனக்கு இப்படித் துக்கம் வரும்படி செய்தவர்கள் யார்? சொல்; அவர்கள் யாராயிருந்தாலும் படும் பாட்டைப் பார். உன்னை யார் நிந்தித்தார்கள்! அல்லது அவமானப் படுத்தினுர்கள்! தங்கமே! நீ ஏன் இந்தப் புழுதியில் புரண்டு கொண்டிருக்கிருய்! உன்னை இந்த நிலைமையில் பார்க்க எனது மனம் எவ்வளவு வேதனைப்படுகிறது! உன்னிடத்தில் அன்பு வைத்த என் முன்னுல் எனது மனம்துடிக்கப் பேய் பிடித்தவள் போல் புழுதி படிந்த பூமியிற் புரளுவது உனக்குத் தகுமோ? தொழிலில் தேர்ந்த அநேக மருத்தவர்கள் நம் மாளிகையில் இருக்கிருர்கள். உனக்கு ஏதாவது நோய் என்ருல் உடனே சொல்லு; ஒரு நொடியில்

அவர்களை வரவழைத்து உனது நோயை தீர்த்து வைக்கிறேன். உனக்குத் தீமை செய்தவர் யார்! உன்னிடத்திலிருந்து யார் நன்மையைப் பெற வேண்டும்? எனது உயிரைக் கொடுத்தாவது உனது வேண்டு கோளை நான் முடித்து வைக் கிறேன்.''

அவ்வார்த்தையைக் கேட்ட கைகேயி கண்ணி லிருந்து நீர் சொரிய, "அரசே! உமக்கு என்னி டத்தில் இவ்வளவு தயை இருக்கிறதா?'' என்றாள். தசரதனுக்கோ இதென்ன வேடிக்கை என்று சிரிப்பு வந்து விட்டது. 'உனக்காக எனக்கிருக்கும் செல்வம்—செல்வாக்கு முழுவதையும் செலவிடு வேன். என்ன வேண்டுமானாலும் கேள். யாரைத் தண்டிக்க வேண்டும்! தண்டனையிலிருந்து யாரை விடுவிக்க வேண்டும்! சூரியனுடைய தேர்ச் சக்க ரம் எது வரையிற் சுழல்கின்றதோ அது வரையில் என்னுடையது இவ்வுலகம்! நீ என்ன சொல் கிறாயோ அதை உன் மகன் இராமனது ஆணை யாய்ச் செய்கிறேன், சொல்.''

"அரசே! முன்னொரு காலத்தில் இந்திரனுக்கு உதவியாக நீங்கள் சம்பராசுரனோடு யுத்தம் செய் தது நினைவு இருக்கிறதா? சம்பராசுரனை வென்ற களிப்பில் ஒரு விழாகூட நடத்தினீர்களே! அப் போது, போர்க்களத்தில் உடம்பெல்லாம் காயப் பட்டு நினைவிழந்து போன உம்மைச் சாமர்த்திய மாய் பகைவரிடமிருந்து காப்பாற்றினேனே, அதை விழாவில் புகழ்ந்து பேசி, என் உயிரைக் காப்பாற்றிய கைகேயி தேவிக்கு இரண்டு வரங் கள் தருவேன்'' என்று சொல்ல, "எனக்கு வேண் டும்போது கேட்கிறேன்'' என்று நான் சொல்ல,

"எப்பொழுது கேட்டாலும் இரண்டு வரங்களை நான் தருவேன்," என்றும் கூறினீர்கள் அல்லவா?

"ஆமாம்."

"அவற்றை இப்போது கொடுங்கள்."

தசரதன் அவளைத் தழுவி, "மாதரசி! இதற்கித்தனை சந்தேகமென்ன? இன்றைக்கே வாங்கிக்கொள். இரண்டு வரங்களையும் கேள். இப்போதே தருகிறேன்" என்றார்.

கைகேயி எழுந்து உட்கார்ந்தாள். மகிழ்ச்சி நிறைந்த மனதோடு தசரதன் அவளைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். கைகேயிக்குத் தனது தேவையைச் சொல்லத் தைரியம் வந்துவிட்டது; இரண்டு வரம் கிடைத்துவிடும் என்னும் உறுதியும் பிறந்துவிட்டது.

கைகேயி "இரண்டின் ஒன்றினால், என் மகன் பரதன் அரசாள்வது; மற்றொன்றினால் சீதையின் கணவன் இருக்கிறானே அவன் பதினான்கு வருடம் போய் வனம் ஆள்வது" என்று துணிந்து இரண்டு வரங்களையும் கேட்டாள்.

அந்த வார்த்தைகளைத் தசரதன் கேட்டானோ இல்லையோ, அவ்வளவுதான். நஞ்சு தீண்டி அந்நஞ்சினால் உடல் வெந்து கீழே விழுந்த ஒரு மதயானையைப்போலப் பூமியில் விழுந்தான். வேதனை முற்றிட கொல்லன் ஊதுலைக் கனல்போல பெருமூச்சு விட்டான்! மனத்துயரைத் தாங்க முடியாமல் மூர்ச்சையடைந்துவிட்டான். பிறகு மெள்ள உணர்ச்சி பிறந்தது. வேலாயுதத்தால் எய்யப்பட்ட யானைபோலத் துடித்து கைகேயியைப் பார்த்து, "இது உன் செயல் அல்ல. யாரோ உன்

அறிவைக் குழப்பிவிட்டிருக்கிறீர்கள். உண்மையைச் சொல்'' என்று கேட்டான்.

''நான் மதி மயங்கி கேட்டதன்று; என் புத்தியை யாரும் கெடுத்துவிடவில்லை. முன்னொரு காலத்தில் நீங்கள் தருவதாக வாக்களித்த இரண்டு வரங்களைத்தான் இப்போது நான் கேட்டேன். கொடுத்தால் வாங்கிக் கொள்கிறேன்; இல்லையென்றால், இதிலொன்றும் எனக்குக் கேவலமில்லை.''

'அடி பாவி! பாவி! என் உயிரைப் பறிக்கின்றாயே! ஐயையோ! தருமம் பொல்லாதது! பொல்லாதது!'

''நீங்கள் எனக்கு வேண்டும்போது இரண்டு வரம் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறீர்கள். அவற்றை இப்போது தரச் சொல்லிக் கேட்டால், கொடுக்காமல் என்மேல் உமக்குக் கோபம் உண்டானால் அதற்கு நானென்ன செய்வேன்! உங்களைப் போல் கொடுத்த வாக்கை நிறைவேற்றத் தெரியாதவர்கள் இந்த உலகத்தில் யார் இருப்பார்கள்? அரசர்கள் மனைவிக்குக் கொடுத்த வாக்கைப் பொய்யாக்குவார்கள் என்றெல்லாம் வசை மொழி எழும். நானென்ன செய்யட்டும்!''

கைகேயி சொன்ன சொற்கள் பகைவன் எறிந்த வேல் பாய்ந்து மார்பில் உண்டாயிருந்த புண்ணின் துவாரத்துக்குள் கொள்ளிக்கட்டையைச் செருகியதுபோல் தசரதன் செவிகளில் பாய்ந்தது. மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, ''உன் மகன் பரதனே ஆளட்டும். ஆனால் இராமனைப் பிரிந்து நான் ஒரு கணங்கூட என் உயிரை வைத்திருக்க மாட்டேன். ஆதலால், தேவி!

அவனைக் காட்டுக்கு விரட்ட வேண்டாம். குற்ற மற்றவன் என் இராமன்; உலகம் புகழும் குணாளன். எல்லாராலும் விரும்பத்தக்க அழகுள்ளவன்; மிக்க அடக்கமுடையவன். வெகு வல்லமை பொருந்திய வன்; மிகுந்த சாந்தியுள்ளவன்; எல்லாரையும் தம் வசத்தில் அடக்கியாளுகிறவன். நீதி தவருது நடப்பவன்; பகைவரை அழிப்பவன். உயர்ந்த தோள்கள், திரண்டுருண்ட கைகள், சங்கு போன்ற கழுத்து, தசைப்பற்றுள்ள கன்னங்கள், விசால மான மார்பு, பெரிய தனுசு உடையவன். இந்தப் பூமியில் உள்ள எல்லா மக்களும் இராமனுக்கு முடி சூட்டு விழா நடக்கப் போவதைப்பற்றி பெற் றெடுத்த நம்மைக்காட்டிலும் பெருமகிழ்ச்சி யடைந் திருக்கிருர்கள். பரதன் நியாயத்தின் வடிவந்தான். பேராண்மை பெற்றவன்தான். ஐயமில்லை. ஆனால் 'இராமனுக்கு இணையாக மாட்டான் பரதன்' என்று அடிக்கடி பேருவகையோடு பேசுவாயே! 'இராமனைப் பயந்த வெற்கிட ருண்டோ' என்று மகிழ்ந்து மகிழ்ந்து சொல்லு வாயே! நீயா இன்று அவன் பெயரைச் சொல்லவும் மனமின்றிச் சீதையின் கணவனனவன் காட்டுக் குப் போக வேண்டும் என்று சொல்லுகிருய்! எதனுல் ஏற்பட்டது இந்த வெறுப்பு? என் மகனும் என்னுயிருமான இராமனை மாத்திரம் அயோத் தியைவிட்டு அப்பால் போகாமல் இருக்கும்படி நீ தயை செய்! கைகேயி உன் காலைப் பிடித்துக் கேட்டுக்கொள்கிறேன். இரக்கம் காட்டு," என்று கைகேயியின் காலிலே விழுந்து கெஞ்சினன். தசரதன் எவ்வளவோ கெஞ்சியும் கைகேயிக்கு

மனம் இரங்கவில்லை. அவள் எதையும் கேளாமல் எவருடைய கோபத்துக்கும் அஞ்சாமல் இருந்தாள்.

தசரதன், "என்னெதிரே இராமன் காட்டுக்குப் போய்விட்டானுனல் நான் ஒரு கணம்கூட உயிரை வைத்திருக்கப் போவதில்லை. அடி பாதகி! எப்படியாகிலும் நீ தொலைந்து போ. அந்த இரண்டு வரமும் உனக்குக் கொடுத்தேன்," என்று சொல்லி துயரக் கடலில் விழுந்தான்.

அரசர் கட்டளை

பொழுது புலர்ந்தது. பட்டணத்திலுள்ள பெண்களெல்லாம், 'இராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப்போகிறது' என்று முழக்கின பேரிகைச் சத்தங் கேட்டு, மேகத்தைக் கண்ட மயில்கள்போல் மகிழ்ச்சியோடு எழுந்திருந்தார்கள். 'இராமனுடைய முடி சூட்டு விழா கோலாகலத்தைப் பார்ப்பதை ஓர் இரவு நடுவே வந்து கெடுத்ததே' என்று அந்த இரவை ஊழிக்காலம் போலக் கழித்தவர்களான ஆடவர்களெல்லாம் தாங்களும் இந்த நிலவுலகமனைத்தும் சுகப்படுகிற நாள் இந் நாள்' என்று மகிழ்ச்சியோடு எழுந்திருந்தார்கள். அதிக காலமும் கவனமும் செலவழித்து அலங்காரம் செய்துகொண்டார்கள்.

எங்கும் பேரிகை, மத்தளம், தாளம் முதலான வாத்தியங்கள் முழங்கின. அயோத்திமா நகரத்தில் சிற்றரசர்களெல்லாம் சந்திரோதயம்போல முத்துக் குடைகள் பிரகாசிக்க, அன்னப் பட்சிகள் பறக்

கிறதுபோல வெண்சாமரை இரு பக்கத்திலும் வீச, வந்து நிறைந்திருந்தார்கள். எட்டுத் திக்குகளிலும் இருந்து வந்த அரசர்களும் முனிவர்களும் விழா மண்டபத்தில் வந்து கூடினுர்கள்.

மங்கள பேரிகை முழக்கினுர்கள். வசிட்ட மாமுனிவர் விழா மண்டபம் வந்து சேர்ந்தார். சோதிடர்கள் வசிட்டரிடம் முகூர்த்த காலம் நெருங்கிவிட்டது என்று சொன்னுர்கள். அதைக் கேட்ட வசிட்டர் அருகிலிருந்த அமைச்சர் சுமிங் திரரை அழைத்து, "நீங்கள் சென்று சீக்கிரம் சக்கரவர்த்தியை அழைத்துக்கொண்டு வாருங் கள்," என்று சொன்னுர்.

சுமந்திரர் சபா மண்டபத்தை அடைந்தார். அவ்விடத்தில் சக்கரவர்த்தி இல்லாமையால், அங்கு இருந்தவர்களிடம் கேட்டறிந்து கைகேயி யின் அந்தப்புரத்துக்குச் சென்ருர். வாசலில் நின்று, தாதிகளிடம் சொல்லி அனுப்பினுர் சுமந் திரர்.

"அமைச்சர் சுமந்திரர் வந்திருக்கிருர். மாமன் னரை விழா மண்டபத்தில் இருப்பவர்கள் எதிர் பார்த்திருப்பதாகச் சொல்லச் சொன்னுர்" என்ருர் கள் தாதிகள். அதைக் கேட்ட கைகேயி, "இரா மனை இங்கு அழைத்துவரும்படி அமைச்சரிடம் சொல்லுங்கள்; போங்கள்" என்ருள்.

இராமனை அழைத்து வருமாறு சொல்லி விட்டாள் கைகேயி. அதைக் கேட்ட சுமந்திரர் அளவிலா மகிழ்ச்சி பொங்க இராமன் இருந்த இடத்திற்கு விரைந்து போய், "தன் திருவுள்ளத் துள்ளே தன்னையே நினையும்" இராமனைக் கண்டு வணங்கி, "கொற்றவர், முனிவர், மற்றும் குவல

யத்து உள்ளார் எல்லோரும் உன் தந்தையைப் போலவே ஒரே ஆசையோடு உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கைகேயோடு சிற்றன்னை உன்னை கூட்டிவரச் சொன்னார். பொன்தட மகுடம் சூட உடனே புறப்பட்டு வருவாயாக'' எனப் பணிவன்போடு சொன்னார்.

தெய்வ கீதங்கள் பாடத் தேவரும் மகிழ்ந்து வாழ்த்த இராமன் மலர்களால் அலங்கரிக்கப்பட்டத் தேரில் ஏறிப் புறப்பட்டான். இராமன் இருந்த தேர் போகும்போது அயோத்திமா நகரத்திலுள்ள பெண்கள், குழந்தைகள், ஆண்கள் எல்லோருமாக மாடங்களிலும் வீதிகளிலும் வந்து கூடினார்கள். பெண்களெல்லாம் மான் கூட்டங்கள் நிற்கிறது போலவும், மயில் கூட்டங்கள் நிற்கிறது போலவும் மின்னற் கூட்டங்கள் பிரகாசிக்கிறது போலவும் வந்து நெருங்கி செடி, கொடிகளையும் திரைச் சீலைகளையும் தோரணங்களையும் இப்படியும் அப்படியுமாகத் தள்ளிக்கொண்டு கூந்தல் கலைந்ததையும், ஆடை சரிந்து போவதையும் இடுப்பில் அணிந்த சங்கிலிகள் அற்று விழுந்ததையும் கவனிக்காதவர்களாய் ஓடிவந்து நெடுங்காலம் மழையில்லாமையால் தண்ணீரில்லாத காலத்தில் மிகவும் தாகத்தோடு அலைகின்ற மான் கூட்டங்கள் நீர் நிரம்பியிருக்கிற ஒரு தடாகத்தைக் கண்டு மேன்மேலும் போய் விழுவதைப்போல நிறைந்து நெருங்கினார்கள்.

சில பெண்கள், 'அகலிகையின் சாபத்தை விமோசனம் செய்த அழகிய பாதங்களையும், சனக மன்னருடைய கொலு மண்டபத்தில் மேருமலைக்குச் சமமான வில்லை முறித்த இராமனுடைய

அழகிய தோள்களையும் பார்க்கவேண்டும்' என்னும் ஆவலில் பள்ளத்தில் பாய்கிற வெள்ளம் போல விரைந்துவந்து மொய்த்துக்கொண்டார்கள்.

இராமன் தேரில் அரச வீதி வழியே சென்றான். அவனைப் பார்த்த ஒருத்தி, 'இத்தனை பேர்களுடைய கண்களிலும் அகப்படாமல் போகும் இந்த அழகனைத் தன் கண்ணுள் அடங்கும்படி செய்து கொண்ட சீதையல்லவோ பெரியவள்-புண்ணியம் செய்தவள்!' என்று எண்ணிப் பெருமூச்செறிந்தாள். ஒருத்தி இராமனுடைய திருமேனியைப் பார்ப்பதற்கு முன்னே பெண்கள் வந்து நெருங்கி விட்டதால், அவர்களுடைய இடைகளின் சந்துகளில் தன்கண்களை வைத்துப் பார்த்தாள்.

தேரின்மேல் போகிற இராமனைப் பார்த்து, 'நெடுங் காலம் நீர் நலமாயிருக்க வேண்டும்.' என்பவர்களும், 'நாங்கள் செய்த நன்மைகளெல்லாம் உமக்குச் சித்திக்க வேண்டும்!' என்பவர்களும், 'இவருடைய திருவிழிகளுக்குச் செந்தாமரை மலரையும், திருமேனிக்கு மேகத்தையும் உவமானம் சொல்லத்தக்கனவாக அவைகளென்ன புண்ணியம் செய்தனவோ!' என்பவர்களும், பூமி எல்லாருக்கும் பொதுவென்று சொல்லுவதை இன்று முதல் சொல்லக்கூடாது; அது இனி இவரதுதான்,' என்பவர்களும், 'இவர் சொன்னபடி கேட்டு நாட்டை ஆளுகின்ற சிற்றரசர்களுடைய பாக்கியமே பாக்கியம்' என்பவர்களும் வீதிகளில் மொய்த்துக் கொண்டிருந்த பலரும் இராமனைப் பாராட்டினார்கள்; வாழ்த்தினார்கள். இப்படிச் சகலரும் வாழ்த்த வீதி வழியாக வந்து, தசரதன் தங்க நேர்ந்த

கைகேயியினுடைய மாளிகையின் முன் கட்டுக்கு இராமன் போனான்.

இராமன் வருகையை அறிந்த கைகேயி, இவனிடம் சக்கரவர்த்தி 'நீ காட்டுக்குப் போக வேண்டும்' என்று சொல்லமாட்டார்; நாமே சொல்வோம் என்று துணிந்து மாளிகையின் முன் கட்டுக்கு வந்து சேர்ந்தாள். அந்தி வந்து அடைந்த தாயைக் கண்ட பசுக் கன்றைப்போல இராமன் மனங்களித்து கைகேயியின் காலில் விழுந்து வணங்கினான். இரும்பைப்போல வலிய மனத்தையுடைய கைகேயி அன்பும் பணிவும் நிறைந்து நின்ற இராமனைப் பார்த்து, "அப்பா! உன் தந்தையின் கட்டளை ஒன்று உண்டு. இப்போது நான் அதனை உனக்குச் சொல்லலாமென்று இருக்கிறேன்," என்று கூறினாள்.

அதைக் கேட்ட இராமன், "அம்மா! தந்தை கட்டளையிட்டால் செய்வேன்; நீங்கள் சொன்னால் செய்ய மாட்டேன் என்ற எண்ணமா! உங்கள் கட்டளையேயானாலும் அதன்படிச் செய்யக் காத்திருக்கின்றேன். தந்தை கட்டளையிட, அதை நீங்கள் எனக்குச் சொல்ல நான் அதன்படி நடப்பதைக் காட்டிலும் சிறந்தது வேறு என்ன இருக்கிறது! தந்தையும் தாயும் நீங்களே! அருள் கூர்ந்து சொல்லுங்கள்; அவர் ஆணை எதுவாயினும் அதைச் செய்வேன்;" என்றான்.

இப்படி இராமன் சொன்னதைக் கேட்டதும் 'முடிந்தது காரியம்' என்ற உறுதி கைகேயிக்கு பிறந்துவிட்டது. கொஞ்சமும் தயங்காமல் தனது கோரிக்கையைச் சொன்னாள். "இராமா ! பரதன் இந்த இராச்சியத்தை ஆள்வான். நீ காட்டிற்குச்

சென்று தவத்தைச் செய்து பதினான்கு ஆண்டுகளைக் கழித்து வருவாயாக என்று அரசர் கட்டளையிட்டுள்ளார். ஆதலால் நீ அவ்வாறே உடனே புறப்பட்டுக் காட்டுக்குச் சென்று உன்னுடைய உறுதி மொழியையும் உன் தந்தையின் சத்தியத்தையும் காப்பாற்றுவாயாக."

"அம்மா! என்னைப்போல் பாக்கியம் செய்தவர்கள் இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள். உள்ளன்போடு என்னை வளர்த்தெடுத்த நீங்கள் நான் செய்ய வேண்டுவது இதுதான் என்றால், பதினான்கு வருடம் வனத்தில் தங்கி, சடைகள் தாங்கி, தவமேற்கொண்டு, முனிவரோடு வாழ்ந்து நல்லாறுகள்தோறும் நீராடி வாழவும், தம்பி பரதனே தசரத சக்கரவர்த்தியினுடைய பரந்த சாம்ராச்சியத்தை ஆளவும் ஒப்புக்கொள்கிறேன். இப்போதே நான் காட்டுக்குப் போகிறேன். இதற்கு மேலான பாக்கியம் இனிமேல் வேறு என்ன இருக்கிறது?" என்று அப்பொழுதுதான் மலர்ந்த தாமரையின் அழகையும் மிஞ்சும் முக மலர்ச்சியோடு சொல்லி, இராமன் கைகேயியை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, தந்தை இருந்த திசையைப் பார்த்து கைகூப்பித் தொழுதுவிட்டு, கோசலையினுடைய மாளிகைக்குச் சென்றான்.

"மாமன்னன் கோலத்தில், முடியில் பொன் தடமகுடம் பளபளவென்று பிரகாசிக்க, வெண்கொற்றக் குடை மேலே பிடித்துவர, இரண்டு பக்கத்திலும் வெண்சாமரைகள் வீசிவர வேலேந்திய சிற்றரசர்கள் வாழ்த்துக்கள் சொல்லிக்கொண்டு தொடர்ந்துவர மகன் வருவான்" என்று கோசலை ஆசையோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

உடனே வனவாசத்துக்குப் புறப்படுவதாகக் கைகேயியிடம் விடை பெற்றுக்கொண்ட இராமன், நடக்கவேண்டியபடி ஆட்டிவைக்கும் விதியானது முன்னுல் வழிகாட்டிச் செல்ல, அரச சின்னங்கள் இல்லாமல், பணியாட்கள் உடன் வரப்பெருமல் கோசலையின் மாளிகைக்குத் தனியாக வந்தான். அவளுடைய தாமரைப் போன்ற பாதங்களில் வீழ்ந்து வணங்கினுன். கோசலை அவனை மன முருக வாழ்த்தி, "அன்பிற்குரியவனே! குழைக் கின்ற கவரியின்றி, கொற்றவெண் குடையுமின்றி மஞ்ஞனப் புனித நீரால் தலை நனையாமலும் நீ வந் திருப்பதைப் பார்த்தால், முடிசூட்டு விழா நடப்ப தற்கு ஏதோ இடையூறு ஏற்பட்டுவிட்டது போல் தெரிகிறதே" என்ருள்.

அதற்கு இராமன், "அம்மா! இந்த நாட்டை உங்களுக்கு மிகவும் பிரியமுள்ள மகனுகிய என் தம்பி பரதனே ஆளப்போகிருன்" என்ருன்.

அதைக் கேட்ட கோசலை, "மூத்தவன் இருக்க இளையவனுக்குப் பட்டம் கட்டுவது முறைமை யல்ல வென்று பிறர் சொல்லக்கூடும். மற்றவர்கள் சொன்னுலும் சொல்லட்டும். மகனே! சக்கரவர்த்தி எப்படிச் சொல்கிருரோ அப்படிச் செய்! பரதன் நல்லவன். சிறந்த குணங்கள் நிறைந்தவன்! அவன் அரசனுவது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக் கிறது. அரசர் எல்லாம் அறிந்தவர். அவர் சொல் வதை மறுக்காமல் அதன்படி நடப்பதுதான் உன் கடமை! உன் தம்பிக்கு அரசுரிமையை நீயே கொடுத்து அவனுடன் மனமொத்துப் பல ஊழி காலம் வாழ்வாயாக" என்று வாழ்த்தினுள்.

இராமன், பரதன், இலக்குவனன், சத்துருக்கனன் ஆகிய நான்கு பிள்ளைகளுக்கும் அன்பு காட்டுவதில் வேற்றுமை யில்லாத தாயின் அருளை வியந்து, இராமன் தன் தாயாரிடத்தில், பட்டாபிஷேகம் தனக்கில்லை யென்பதையும், பரதன் முடி சூடப்போகிறான் என்பதையும், தான் பதினான்கு வருடம் வனவாசம் செய்யப்போவதையும் முகத்தில் கொஞ்சமும் வருத்தக் குறிகள் இல்லாமல் சிரித்துக் கொண்டே சொன்னான்.

இராமன் அப்படிச் சொன்னவுடன் கோசலை மூர்ச்சையாகிக் கீழே விழுந்தாள். இராமனும் இலக்குவனனும் அவளைத் தூக்கி யெடுத்து சாமரையைக் கொண்டு குளிர்ந்த காற்று அவள் முகத்தில் தவழ மெல்ல விசிறினர்.

கோசலை மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். கண் திறந்து சுற்று முற்றும் பார்த்தாள். "அன்பிற் குரியவனே! தரும குணங்கள் உடையவனும் மூத்தவனுமான உன்னை காட்டுக்குப் போகவேண்டும் என்று உன் தந்தை கட்டளையிட்டார்? அழியாத பேரறமும் பெரும் புகழும் உன்னால் அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் உன் தந்தையா இவ்வாறு ஆணையிட்டார்? தந்தை மனம் நோக, தருமம் தலைகுனிய தெரியாமல் ஏதேனும் தீங்கிழைத்துவிட்டாயா? குணங்களில் சிறந்தவனான உன்னை—மற்றவர்களைவிட மனப்பூர்வமாக உன்மேல் அன்பு பாராட்டிவந்த மாமன்னர் உன்னை சடையும் மரவுரியையும் தரித்துப் பதினான்கு வருடம் காட்டுக்குப் போகும்படி சொல்ல நீ செய்த குற்றந்தானென்ன? வஞ்சமோ மகனே! உனை 'மாநிலம் தஞ்சமாக, நீ தாங்கு' என்ற வாச

கம்? தருமம் தலைகாக்கும் என்பார்களே. அறம் எனக்கில்லையோ! என்று சொல்லி அழுதாள்.

இலக்குவனால் கோசலை படும் துயரைப் பார்த்துக்கொண்டிருக்க இயலவில்லை. பரதனே சக்கரவர்த்தியாகட்டும்; இராமன் காட்டுக்குப் போகாதபடி தடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கோசலைக்கு உயிர் போய்விடும். சக்கரவர்த்தி ஏன் இப்படிச் செய்தார்? சிற்றன்னை தான் பெற்ற வரத்தால் அரசுரிமையைப் பெற்றாள்; அண்ணன் இராமனுக்கு வனத்தை அளித்தாள் என்பதைக் கேட்டுக்கொண்டிருந்த இலக்குவனன் கொதிப்படைந்தான். கோபத் தீ சொற்களாகத் தெரித்தது. கோவைப்பழம் போல் சிவந்துபோய் விட்டன அவன் கண்கள். கோப மனப்புழுக்கம் வார்த்தைகளாக வெளிப்பட்டன. 'என்னுடைய சிற்றன்னை சிங்கக் குட்டிக்கு இடுகின்ற சுவையுள்ள இறைச்சியை ஓர் அற்ப நாய்க்குட்டிக்கு இட நினைத்தாள் போலும்! அவள் அறிவின் அழகிது' என்று ஏளனம் செய்தான். சினம் மேலிட்டு தந்தையையைப்பற்றியும் சிற்றன்னையைப்பற்றியும் மனம் போன போக்கில் இழிவாகப் பேசினான். "அண்ணா உனக்கு முடிசூட்டுவேன் என்று சொன்ன அரசனின் வார்த்தையைப் பொய்யாக்கி, உனக்குரிய அரசுரிமையைக் கெடுத்த, மை போலும் கரிய மனமுடைய கைகேயியின் முன்னே, எவர் வரினும் அவர்களைக் கொன்று குவித்து அந்தப் பிணக் குவியல்களின் மீது ஏறி நின்றுகொண்டு உனக்கு இன்றே முடிசூட்டுவேன்" என்று ஆங்காரமாக எழுந்தான்.

அவன் கோபத்தைத் தணிப்பதற்காக மிக்க உணர்ச்சியோடு, 'தம்பி, இது நம் தந்தையின் குற்றமன்று; சிற்றன்னை செம்மையும் சீர்மையும் அறிவும் அறமும் இழந்து செய்த கொடுமை என்பதும் சரியன்று; நாட்டையாள்வது துன்பம் தரும் என்பதை நான் அறிந்திருந்தும் இதற்கு ஒப்பினனே, அதனால் இது என் குற்றம் ஆகுமா? அதுவும் அன்று. நதிகளில், சில காலங்களில் நீரின்றி வற்றிவிடுவது அந்நதியின் குற்றமன்று. மழை பெய்யாமல் போனதற்காக நதியை வைவதில் பொருளுண்டா? அதேபோல, உலக மக்கள் அறிவிற்கும் ஆற்றலுக்கும் அடங்காது அவர்களை நடத்திச் செல்லும் விதியின் குற்றமிது. இதற்கு என்னை நீ கோபித்துக் கொள்வதிலோ—உன்மீது நான் ஆத்திரப்படுவதிலோ ஒருபொருளுமில்லை. விதியை யார்தான் எதிர்க்க முடியும்?'' என்றான் இராமன்.

இலக்குவனனின் கோபம் கொஞ்சம் அடங்கிற்று.

'இராமன் காட்டுக்குப் போகத் தயாராயிருக்கிறான். கூடாது, கூடாது இந்தக் கொடுமை. ஆழிசூழ் உலகமெலாம் பரதனே ஆளட்டும். இராமன் மட்டும் காட்டுக்குப் போகாமல் இருக்கவேண்டும். அரசரிடம் இதை நாமே போய்ச் சொல்லுவோம்' என்று எண்ணிக்கொண்டு கைகேயியின் அரண்மனைக்குப் போனாள் கோசலை.

அங்கு அரசன் நினைவிழந்து பூமியில் விழுந்து கிடப்பதைப் பார்த்ததும் நிலைகுலைந்து நின்றுவிட்டாள். பின்னர், "நான் இதைப் பார்த்துக்கொண்டு என் உடலையும் உயிரையும் வைத்துக்கொண்டிருக்கிறேனே! அப்பா, மகனே, உன் தந்தையின் கதி

யைப் பார்க்கவாவது வரமாட்டாயா'' என்று புலம்பி அழுதாள்.

இவ்விதம் கோசலை வந்து அழுவதைப் பார்த்தவர்கள் சொல்ல, வசிட்டமா முனிவர் நடந்தவற்றை அறிய கைகேயியின் மாளிகைக்கு வந்தார். மூர்ச்சையாகிக் கிடந்த மன்னனையும் முகப் பொலிவிழந்து நின்றுகொண்டிருந்த கைகேயியையும் கண்டு வியப்பில் மூழ்கினார். நடந்தவைகளைக் கேட்டறிந்து செய்வதறியாது சிறிது நேரம் செயலற்றுக்கிடந்தார். பிறகு அரசரைத் தம் மார்பிலே சாய்த்துக்கொண்டு ஆறுதல் சொல்லித் தேற்றினார். கைகேயியிடம் தன்னுடைய கோரிக்கையை வற்புறுத்தாமல் இருக்கும்படி வேண்டினார்.

அதைக் கேட்ட கைகேயி கண்களில் நீர் திரையிட, உதடுகள் துடிக்க, ''அரசர் வார்த்தைத் தவறுவாரானால் இனி ஒருகணமும் இப்புவியில் என்னால் இருக்க முடியாது. பரதன் அரசனாக வேண்டும். பதினான்கு வருடம் இராமன் காட்டில் வாசம் செய்ய வேண்டும். இதை மாற்ற வேண்டும் என்று யார் சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை'' என்று சொன்னாள்.

வசிட்டரும் கோசலையும் மற்றவர்களும் கைகேயினுடைய வார்த்தைகளைக் கேட்டு மனம் வருந்தினார்கள்.

அவர்களைப் பார்த்து தசரதன் சொன்னான் :

தசரதன் செய்த தவறு

முன்னொரு காலத்தில்—இராமன் பிறப்ப தற்கு அநேக நாட்களுக்கு முன்னுல் வீரர்களுடன் புறப்பட்டு யானை வேட்டையாட ஒரு காட்டுக்குள் போய்த் தங்கியிருந்தேன். வீரர்கள் யானைகளைத் தேடிக்கொண்டிருந்தார்கள். நான் அம்பும் வில் லும் வைத்துக்கொண்டு அருகிலிருந்த ஓடைக்குப் போய் நீரருந்த வரும் யானைகளுக்காக மறைந்து காத்திருந்தேன்.

அப்போது யானை நீர் அருந்துகிறது போல் சத்தம் கேட்க வேட்டை கிடைத்ததென்ற களிப்பில் அம்பு எய்தேன். யாரோ அலறிக் கொண்டு பூமி யில் விழுந்து புரண்டு துடிக்கிற சத்தத்தைக் கேட் டுத் திடுக்கிட்டேன். மனிதக் குரலாக இருப்பதை யறிந்து மனம் பதைபதைக்க ஓடிப் போய்ப் பார்த் தேன். ஒரு சிறுவன் மேல் அம்பு பாய, அவன் அல றிக் கொண்டு இருந்தான். மனம் பதைபதைக்க என் கையில் இருந்த வில்லைப் பூமியிலெறிந்து

விட்டு, அந்தச் சிறுவனைத் தூக்கித் தெரியாமல் இந்தப் பாவம் செய்து விட்டதாகத் தெரிவித்து என்னை மன்னிக்கும் படி வேண்டி, "நீ யாரப்பா?" என்று கேட்டேன்.

கண்ணிழந்த வெகு முதியவர்களான தன்னுடைய தாய் தந்தையர் இருவரையும் காவடி கட்டிச் சுமந்து கொண்டு ஊரூராகத் தலயாத்திரைக்காகப் போய்க் கொண்டிருப்பதாகவும், அவர்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்ல அந்த ஓடைக்கு வந்து புருடையில் தண்ணீர் மொள்ளும் போது அம்பொன்று வந்து தன் மேல் பாய்ந்ததென்றும், தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கும் தன்னுடைய பெற்றோருக்குத் தண்ணீரைக் கொண்டு போய்க் கொடுத்து, தனக்கு நேர்ந்த ஆபத்தையும் தெரிவிக்கச் சொல்லி விட்டு இறந்து போனான்.

நான் மிக்க வருத்தத்தோடு புருடையில் தண்ணீரை எடுத்துக் கொண்டு தம் மகன் தாகத்துக்கு நீர் கொண்டு வருவான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனுடைய பெற்றோர்களிடம் சென்று கொடுத்தேன். பிறகு, அவர்களிடம் நடந்ததைச் சொல்லி என்னை மன்னிக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு மகன் போல் இருந்து அவர்களிட்ட ஏவலைச் செய்து கொண்டிருக்கின்றேன் என்றும் சொல்லி அவர்களுடைய காலில் விழுந்தேன்.

அதைக் கேட்ட மாத்திரத்தில் அந்த முதியவர்கள், "எங்களுடைய பிள்ளை போன பின் நாங்கள் இனி உயிர் வாழ மாட்டோம். இன்று தான் உண்மையில் நாங்கள் கண்ணிழந்தவர்களானோம். எப்படி நாங்கள் எங்கள் மகனைப் பிரிந்த துக்கத்

தால் சாகப் போகிருேமோ அப்படியே நீயும் உன் மகனைப் பிரிந்த சோகத்திஞல் சாகக் கடவாய்!' என்று சொல்லி விட்டு இறந்து போனுர்கள்.

அப்போது எனக்கு மக்களில்லை. பெரியவர்கள் சாபமாவது, கோபமாவது என்ன செய்யும் என்று கவலையற்றிருந்தேன். இராமன் பிறந்த பிறகு இந்தச் சம்பவம் அடிக்கடி என் கவனத்திற்கு வரும். ஒரு சமயம் விசுவாமித்திர முனிவர் வந்து, "தருவனத்துள் யான் இயற்றும் தவவேள்விக்கு அரக்கர்கள் இடையூறு செய்கிருர்கள். அவர்களுடன் போரிட்டு என்னுடைய வேள்வியைக் காக்கும்படி சொல்லி, உன்னுடைய பிள்ளைகள் நால்வருள்ளும் கருநிறத்தோடு கூடிய வீரஞன இராமன் ஒருவனை மட்டும் என்னுடன் அனுப்பிவை!" என்று கேட்டவுடனே எனக்கு முதியவர்களிட்ட சாபம் நினைவுக்கு வந்து, என்னுடைய உயிர் பிரியக்கூடிய காலம் வந்து விட்டதோ என்ற கவலை ஏற்பட்டு விட்டது. வசிட்டர், " இராமன் விசுவாமித்திரரிடமிருந்து எண்ணற்ற புதிய கலைகளைக் கற்கப் போகிருன். ஆலோசிக்காமல் உடனே அனுப்பிவை," என்று சொல்லவே, இராமனை அனுப்ப நான் சம்மதித்தேன்.

இப்போது—நானும் நீங்களும் எவ்வளவோ கெஞ்சியும் கைகேயி மனம் இரங்கவில்லை. பரதனே அரசஞகட்டும். இராமனை மட்டும் காட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்று மன்ருடிய போதும் இவள் மனம் நெகிழவில்லை.

சம்பரனுடன் நான் செய்த போரில், தன் உயிரையும் பொருட்படுத்தாமல் என்னுடன் போர் முனையில் நின்று போராடி என் உயிரைக் காப்

பாற்றியவள் கைகேயி. அன்று எந்த உயிரைக் காப்பாற்ற அஞ்சா நெஞ்சுடன் அயராது முயன்ருளோ, அதே உயிரை இன்று அவளே பறித்துக் கொள்ள நினைக்கிருள். உலகம் தன்னை பழிக்கும், தன்னுடைய திட்டம் கணவன் உயிரையே பலி வாங்கி விடும் என்பது தெரிந்தும் பேசாமல் இருக்கிருள்! உயர்ந்த பண்புகளை உடையவள் தானே கைகேயி. ஆனல் இப்போது அத்தனையும் பாழாய்ப் போகின்றது என்பது உண்மை தான். எனினும் கைகேயி குற்றமற்றவள். இராமன் என்னை விட்டுப்பிரிந்து போவதும், நான் அவனைக் காட்டுக்குப் போகச் செய்த விதியை நொந்து வேதனைப்பட்டு இறந்து போவதும் நிறைவேறக் கூடிய காலம் வந்து விட்டது. எவ்வளவு பெருந் தவங்களைச் செய்து இராமனைப் பெற்றேன். மாற்ருளுடைய மைந்தனையும் தன் மைந்தனுகப் போற்றிப் பெருமை கொள்ளும் பண்பு கைகேயியிடமும் இருந்தது. கைகேயி மனம் இரங்கி இராமன் காட்டிற்குப் போக வேண்டாம் என்று எவ்விதத்திலும் சொல்ல மாட்டாள். கைகேயியினது கொடுமையிலும் அவரவர் அனுபவித்தாக வேண்டிய முறை இருக்கிறது! என்ன செய்வது?" என்று சொல்லி முடித்தார்.

அங்கிருந்து புறப்பட்ட வசிட்டர் விழா மண்டபத்தில் நிறைந்திருந்த அரசர்களிடம் "தீட்டாத வேற்கண் சிறு தாய் கிளர்ஞாலத்தை ஒரு வரத்தால் தனக்கு மீட்டாள். மற்ருெரு வரத்தால் தன் முன்னவனுக்கு வனத்தை அளித்தாள்." என்று அறிவித்தார்.

அதைக் கேட்ட மாதர் அருங்கலமும், மங்கல மும் சிந்த, மூர்ச்சையாகிக் கீழே விழுந்தார்கள்! மன்னர்கள், 'சக்கரவர்த்தியே கேகயன் மகள் மேல் காதல் முதிரக் கருத்தழிந்தானும்; நாமும் இனி அறத்தைக் கைவிடுவோம்' என்றார்கள்

ஆவும் அழ, அதன் கன்று அழ, அன்றலர்ந்த பூவும் அழ, புனற்புள்ளழ, கள் ஒழுகும் காவும் அழ, களிறு அழ, கால்வயப்போர் மாவும் அழ அயோத்தி மாநகரம் அருளையும் அழகையும் இழந்திருந்தது.

பொன்னுடை தரித்து பொன் முடி சூடி வர எந்த தெரு வழியாக இராமன் சற்று நேரத்திற்கு முன்னால் போனானோ, அந்தத் தெரு வழியாக இப் போது மரவுரியைச் சுற்றிக் கொண்டு வந்தான். இலக்குவனனும் இராமனுடன் காட்டுக்குச் செல்ல மரவுரியைத் தரித்துக் கொண்டு வந்து விட்டான். இதைக் கண்ட இராமன், "தம்பி! நம் தாய் தந்தை யர்கள் மிகவும் துயரத்தில் மூழ்கியிருக்கிறார்கள். எப்போதும் அவர்களுடைய சொற்படி நடப்பது நம்முடைய கடமை. நம்முடைய தாய் தந்தையர் களுக்கு என்னைப் பிரியும் வருத்தம் உன்னால் தீர வேண்டும். நீ இங்கேயே இரு" என்று சொன் னான். இலக்குவன் இதற்கு இணங்கவில்லை. தானும் இராமனுடன் காட்டுக்கு வருவதாகப் பிடி வாதம் பிடித்தான். இருவரும் சுமத்திரையிடம் வந்து வணங்கி, வாழ்த்தியருள வேண்டினார்கள்.

சுமத்திரை இலக்குவனைப் பார்த்துச் சொன் னாள்: "அப்பா! இராமன் போகிற ஆரணியந் தான் இனி உனக்கு அயோத்தி. இராமன் உன் தந்தை. இராமன் பின்னால் போகும் போது,

உன்னை தம்பியென்று எண்ணுமல் அடிமையைப் போலெண்ணி ஏவல் செய்து கொண்டிருந்து, இராமன் வரும்போது கூட நீயும் வருவாயாக! போகுமிடத்தில் ஏதேனும் ஆபத்து ஏற்படுவதா யிருந்தால், முதலில் உன் உயிரை விட்டு விடு.''

வனம் சென்றான்

இராமன் இலக்குவனனுடன் சீதையின் மாளிகைக்குச் சென்றான். மகுடம் புனையச் சென்றவன் மரவுரியைச் சுற்றிக்கொண்டு வந்து தன் முன்னால் நின்றதும் மற்றவர்கள் அழுது கொண்டு அவன் பின்னால் வந்ததும் அவளுக்கு விளங்கவில்லை. இராமன் சுருக்கமாகவே அவளிடம் நடந்ததைச் சொன்னான். அவளுக்கு பரதன் சக்கரவர்த்தியாகப் போவது பற்றிச் சிறிதும் வருத்தமில்லை. ஆனால், இராமன் தன்னை விட்டுப் பிரிந்து போகிறான் என்பதைக் கேட்டு மனம் திடுக்கிட்டாள். பிரிவென்னும் தீயவெஞ்சொல் செவிசுடத் தேம்பினாள்.

“கண்ணே! நீ வருந்தாமல் இரு! போய் வருகிறேன்.” என்றான் இராமன்.

“அண்ணலே! அன்னையும் தந்தையும் சொன்னபடி காட்டுக்குச் செல்லத் துணிந்தது ஒப்புவமை இல்லாத ஒரு நற்செயலே. ஆனால், நான் உங்கள் நிழல். நெஞ்சில் கொஞ்சங்கூட இரக்க

மில்லாமல் என்னை விட்டுவிட்டுப் போக நினைக்கி றீர்களே! இது தகுமோ? தர்மந்தானுகுமோ?'' என்று அழுதுகொண்டே கேட்டாள் சீதை.

"முல்லையும் கடல் முத்தும் எதிர்ப்பினும் வெல் லும் வெண்மையான பல்வரிசையுடையவளே! நீயும் என்னுடன் காட்டுக்கு வருவதால் என்ன என்ன நேரக்கூடும் என்பதைக் கொஞ்சம் எண்ணிப்பார். நீ காட்டில் நடக்கமாட்டாய்.' என்று காட்டில் ஏற்படும் தொல்லைகளையும் துயரங் களையும் விரிவாக எடுத்துரைத்து, "நீ காட்டுக்கு என்னுடன் வருவது நல்லதல்ல'' என்றான்.

இதைக் கேட்ட சீதைக்குச் சொல்லமுடியாத கோபம் வந்துவிட்டது. 'எல்லாம் அறிந்த தாங்கள் இப்படிப் பேசுவதைக்கேட்க எனக்குச் சிரிப்பு வரு கிறது. கணவன் வேறு மனைவி வேறு என்பதை இன்றுதான் நான் கேட்கின்றேன். என்னுடைய தாயும் தந்தையும் என்னைத் தங்களுக்கு மணம் செய்து கொடுத்தபொழுது என்ன சொன்னார்கள்? 'இதோ எங்கள் மகள் சீதை! இவள் கற்புக்கரசி யாக எல்லா நலங்களையும் பெற்று உன் நிழலைப் போல் இன்று முதல் உன்னைப் பற்றி நிற்பாள். எப்போதும் விட்டுப் பிரியமாட்டாள்' என்று சொன்னார்கள் அல்லவா? நீங்கள் எங்கே இருக்கி றீர்களோ அங்கே நானும் இருக்கவேண்டும் என் பதே நான் கற்ற ஒழுக்கம். காட்டுக்கு உங்க ளுடன் வந்தால் துன்பப்படுவேன் என்கிறீர்களே, தங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும் எனக்குத் தங்கள் துயரத்தில் பங்கு பெற உரிமை இருக் கிறது. என்னல் தங்களுக்கு ஒரு இடையூறும் ஏற்படாது. நான் மட்டும் இங்கே நல்ல உணவும்

நிறை மகிழ்வும் பெற்று என்ன செய்யக் கிடக்கிறது. நீங்கள் இல்லாத சுவர்க்கம் எனக்கு வேண்டாம்.''

இராமனுடைய கட்டளையின்படி வீட்டினுள் சீதை ஓடிப்போய் மரவுரி தரித்துக்கொண்டு சிரிப்பும் திருப்தியுமாக அவன் முன்னால் வந்துநின்றாள். இராமனுடன் காட்டுக்குப் போவதில் ஒரு குறையும் வருத்தமும் இல்லாமல் இருந்தாள். சீதையின் உறுதியான மனதைக் கண்ட இராமன் அவளையும் உடனழைத்துச்செல்ல இணங்கினான்.

பிறகு, இராமன் இலக்குவனனையும் சீதையையும் அழைத்துக் கொண்டு கைகேயியின் மாளிகைக்குப் போனான். மனமுடைந்து தசரத மன்னன் படுக்கையில் கிடந்தான். 'இராம...ராமா...' என்று முணுமுணுத்துக் கொண்டு இருந்தான். யார் சொல்லியும் அவர்கள் நிற்கமாட்டார்கள் என்பது தெளிவாகிவிட்டது. இராமன் காட்டுக்குப் போவதை யாரேனும் தடுத்துவிடுவார்களோ என்று உள்ளூற கைகேயி பயந்து கொண்டிருந்தாள். அவள் அமைச்சர் சுமந்திரரை அழைத்து "சுமந்திரரே! இரதம் தயாராய் இருக்கிறது. அவர்களை ஏற்றிக் கொண்டுபோய் நாட்டு எல்லையில் விட்டுவிட்டு வாருங்கள்.'' என்று சொன்னாள்.

மூவரும் தசரதன் கோசலை, கைகேயி, சுமத்திராதேவி, வசிட்டர் முதலானவர்களை முறையே பாதங்களைத் தொட்டு வணங்கி விடைபெற்றுக் கொண்டு வந்து இரதத்தில் ஏறினார்கள். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்தப்புர பெண்கள் அனைவரும் 'கோ' என்று அழுதார்கள். சுமந்திரன் இரதத்தை ஓட்டினான்.

தசரதன் நினைவு இழந்துவிட்டான். இனிமேல் அழுவதாலோ ஒருவர்மேல் ஒருவர் ஆத்திரப் படுவதாலோ ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை! கைகேயிதேவி தந்தையிடத்தில் வரம் பெற்றதற்கு இணங்கி இந்த இராமன் காட்டுக்குப் புறப்பட்டு விட்டானே என்று இலக்குமணனுக்குக் கோபம்; இராமனுக்கு தந்தையின் கட்டளைப்படி தர்மத்தைக் காக்க முடிந்ததே என்ற திருப்தி; சீதைக்குத் தன் நாயகனுடன் காட்டுக்குப் புறப்பட முடிந்ததல்லவா என்ற மகிழ்ச்சி. பெருந் துயரோடு இராமனிடத்தில் அளவிடமுடியாத அன்புள்ளவர்கள் அழுது கொண்டே தேரைத் தொடர்ந்து ஓடி வந்தார்கள் அல்லவா, அது அவர்களுக்கொரு ஆறுதலாயிருந்தது!

'வேகமாய்ச் செலுத்து', என்று சுமந்திரரைப் பார்த்து இராமன் சொல்ல, 'தேர் மெள்ள, மெள்ளப் போகட்டும்' என்று மக்கள் சொல்ல அவர்கள் மாலைப் பொழுதில் அயோத்தி மாநகரைக் கடந்தார்கள். அனைவரும் ஒரு சோலையை அடைந்தார்கள்.

நன்ருய் இருட்டி விட்டது. இரதம் நின்றது. நதிக்கரையிலும் மணல் மேடுகளிலும் புல்தரையிலும் வந்தவர்கள் தங்கினுர்கள். அவர்களுள் சிலர் உண்ணவும் உறங்கவும மனமில்லாமல் விம்மி அழுதுகொண்டே இருந்தார்கள். சிலர் ஆங்காங்கு தங்கள் கரங்களையே தலையணையாக வைத்துக் கொண்டு படுத்திருந்தனர். சிலர் சோர்வு காரணமாக சிறிது நேரத்தில் உறங்கி விட்டார்கள்.

அப்போது இராமன் சுமந்திரரை அழைத்து, "குடிமக்கள் என்னிடத்தில் கொண்டுள்ள மிகுந்த

அன்பினுல் தொல்லேகளேப் பொருட்படுத்தாமல் வந்து சூழ்ந்து கொண்டிருக்கிருர்கள். இவர்களே எப்படித் திரும்பிப்போகச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லே. எப்படிச் சொன்னுலும் இவர்கள் போகமாட்டார்கள். ஆதலால், நீங்கள் ஒன்று செய்யவேண்டும். தேரை ஓட்டிக்கொண்டு திரும்பிப் போங்கள். அதைப் பார்த்து இவர்களும் தேர் திரும்பிவிட்டது, இராமன் நகருக்கு வந்துவிட்டானென்று பின் தொடர்த்து வருவார்கள்." என்று சொன்னுன்.

அதைக் கேட்ட சுமந்திரன் என்ன செய்வது என்று தெரியாமல் திணறினுன். "உன்னே விட்டு விட்டு அயோத்திநகரம் செல்ல நான் யாருக்கு என்ன தீங்கிழைத்தேனே தெரியவில்லேயே! புத்திரப்பேறில்லாமல் வருந்தி வேள்வியெல்லாம் செய்து அருமையாய் பெற்ற உன்னே, 'காட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வந்தேன்' என்று உன் தந்தையிடம் எப்படிச் சொல்வேன்?" என்றழுது இராமன் காலில் விழுந்து புரண்டான்.

இராமன் அவரைத் தூக்கியணேத்து, "ஐயா! பூமிக்குத் துன்பமும் இன்பமும் புதிதல்ல. உலகம் ஒரு மேடை. நாமதில் விதியின் விருப்பத்திற்கேற்றபடி நடிக்கிறேம். என் தந்தையை பொய்யனுக்கி விட்டு, மாளிகை வாசமும் மகுடமும் பெற்று நான் வாழ்ந்திருக்கலாம். ஆனுல், அந்த இன்பம் அழியாததா? நாம் அழுவதும் சிரிப்பதும் இயற்கையின் நியதி. இதை மாற்ற யாரால் முடியும்! நீங்கள் போய்ச் சேர்ந்தவுடனே வசிட்டமா முனிவருக்கும் என் தாய்மார் மூவருக்கும் என் தநதைக்கும் என் வணக்கத்தைச் சொல்லுங்கள்.

வசிட்டமாமுனிவருடன் என் தந்தையின் அருகி லிருந்து ஆறுதல் சொல்லி, பரதன் வந்தவுடனே அவனுக்குப் பட்டம் சூட்டுங்கள். தன் தாயாரால் இப்படி நடந்தது என்று அவள்மேல் கோபம் கொள்ளப்போகிறுன்! என்னிடத்தில் எவ்வளவு அன்பாய் இருக்கிருனே, அவ்வளவு தாயாரிடத் திலும் அன்பாய் இருக்கச் சொல்லி, நீதி தவருது ஆட்சி செய்ய உதவுங்கள்." என்று சொன்னுன். சுமந்திரருக்கு அந்த இடத்தை விட்டுச் செல்ல மன மில்லே. சுமந்திரர், சீதை ஏதேனும் சொல்லலா மென்று நின்ருர். அவளும் அதை அறிந்து, 'மாமன்னருக்கும் என் மாமிமாருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தைச் சொல்லுங்கள். என் தங்கையரிடம் நான் வளர்த்த கிளியையும் செடி கொடிகளேயும் நன்ருகப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லுங்கள்." என்ருள்.

ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு சுமந்தி ரர் இலக்குவனைப் பார்த்து, "நீங்கள் ஏதாகிலும் கட்டளேயிடுகிறீர்களா?" என்று கேட்டார். இலக்குவனன், "ஐயா, நான் என்ன சொல்லப் போகிறேன். அண்ணனும் அண்ணியாரும் சொன்னபடியே செய்யுங்கள்." என்ருன்.

சுமந்திரர் அவர்களே வணங்கிவிட்டு வந்தி ருந்தவர்களுக்குத் தெரியாமல் அயோத்திமா நகரை நோக்கித் தேரைச் செலுத்திஞர். இராமன் சீதை யுடனும் இலக்குவனனுடனும் விடிந்தும் விடியாம லும் இருக்கும் அந்த வேளேயில் புறப்பட்டான். மூவரும் காட்டுக்குள் மெள்ள மெள்ள நடந்து போனுர்கள். தன்னுடைய உயர்ந்த லட்சியத் தையும் தம்பியையும் துணேயாகக்கொண்டு இரா

மன் காட்டு வழியே சென்றுன். பஞ்சு போல் மிருதுவாகவும், பிரகாசமுள்ள மிகக் குளிர்ச்சி யான இளந்தளிர்கள் பட்டாலும் உறுத்தும் படியான செக்கச் சிவந்த தாமரையைவிட அழ கான பாதங்கள் நோக, தன்னுடைய மின்னல் போன்ற இடை துன்புற பருவ காலத்து இருண்ட மேகத்தின் மத்தியில் அழகாகப் பிரகாசிக்கும் ஒரு பவளக் கொடிபோலக் கருத்த யானை போன்ற வீரனுன இராமனுடைய பருத்த தோள்களைப் பற்றிக்கொண்டு அவன் பின்னுல் இருளில் அன் னம் போல் நடந்து சென்றுள் சீதை.

ஆளவும் உளன் பரதன்

சுமந்திரர் அயோத்திக்கு வந்து சேர்ந்தார். நேராக வசிட்டரிடம் போய் முன்னே நடந்ததெல்லாம் சொன்னார். 'இராமன் வந்துவிட்டானா?' என்று தசரதன் கேட்டான். 'இல்லை' என்று சொல்ல முடியாமல் முனிவர் ஏங்கினார். தசரதன் சுமந்திரனது முகத்தைப் பார்த்தான். 'இராமன் வந்திலன்' என்பதைத் தெரிந்துகொண்டான். செயலற்றுச் சோர்ந்து கிடந்தான். பேச்சு அடங்கிப் போயிற்று. தசரதனுடைய உயிர் போய்விடும் என்பதை அறிந்த வசிட்டர் சுமந்திரரிடம், இராமன் வெகு தூரம் போய்விட்டானா அல்லது சமீபத்தில்தான் இருக்கிறானா'? என்று கேட்டார்.

சுமந்திரர், "ஆறு நாழிகை தூரத்திலுள்ள மூங்கில் நிறைந்த காட்டு வழியே போய் விட்டார்" என்று சொன்ன உடனேயே தசரதன் உயிர் நீத்தான்.

மாமன்னனின் மரணம் உடனே நகரில் பரவி விட்டது. அதைக் கேட்டவர்கள் புழுப்போல

துடித்துப் புரண்டு புலம்பியழுதார்கள். அயோத்தி மா நகரம் முழுவதும் துயரக் கடலாயிற்று.

அரசனுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்ய மைந்தர் ஒருவரும் அருகிலில்லை. கேகய நாட்டுக்குத் தூதுவர்களை அவசரம் அவசரமாய் அனுப்பி தசரதன் சொன்னதாகவே சொல்லி, பரதனை அழைத்து வரும்படி வசிட்டர் கட்டளையிட்டார். பரதன் வரும்வரை தசரதனுடைய உடலை வாசனைத் தைலத் தொட்டியில் வைத்துப் பாதுகாத்து வரத் திட்டம் செய்தார்.

அயோத்தி நகரத்திலிருந்து புறப்பட்ட தூதர்கள் வழியில் எங்கும் தங்காமல் கேகய நாட்டுக்கு வந்தார்கள். கேகய மன்னனும் அவனுடைய குமாரன் யுதாசித்தும் தூதர்களை வழக்கம்போல் மிகவும் மரியாதையுடன் வரவேற்றார்கள். தூதர்களும் முறைப்படி வணங்கி, துக்கக் குறிப்பு இல்லாமல் ஆபரணங்களும் ஆடைகளும் எதிரே வைத்தார்கள்.

பரதன் தூதர்களைப் பார்த்து, "அயோத்தியில் அனைவரும் சுகமாய் இருக்கிறார்களா?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "அனைவரும் நலமே" என்று சொன்னார்கள். 'குலத்தின் குருவும் அமைச்சர்களும் உங்களை உடனே அயோத்திமா நகரத்துக்கு அழைத்துவர எங்களை அனுப்பியிருக்கிறார்கள். மிக முக்கியமான காரியம். உடனே வரவேண்டுமென்று சொல்லியனுப்பியிருக்கிறார்கள்.' என்றும் சொன்னார்கள்.

தூதர்கள் தெரிவித்தபடியே பரதன் தம்பி சத்ருக்கனனுடன் உடனே அயோத்திக்குச் செல்ல பாட்டன், மாமன் முதலியவர்களுடைய அனுமதி

பெற்று பரிவாரங்களுடன் புறப்பட்டான். அவர்கள் அயோத்திக்கு வந்து சேர ஏழு நாட்களாயின. சோலைகளில் மயில்கள் ஆடத் தாமரை விளக்கு தாங்க, மேகங்கள் மத்தளம்போல முழங்க, குவளை கண் விழித்து நோக்க, தெளிந்த அலைகள் அழகிய திரை காட்ட, மதுர கீதம் பொழியும் மகரயாழ் என்னும் வாத்தியத்தைப்போல் வண்டுகள் இனிது பாட, நன்செய் நிலத்தைக் கோசல நாட்டில் எங்கு போனாலும் பார்க்கலாம். ஆனால், 'அந்த அழகும் வளமும் இந்த நாட்டை விட்டு எப்போது பிரிந்து போய்விட்டன?' என்று எண்ணிப் பரதன் வியப்பிலாழ்ந்தான். ஓங்கி வளர்ந்து, மலைச் சிகரங்களுக்கு இடையிலே உற்பத்தியாகி, பல கிளைகளாகப் பெருகி ஓடி கோசல நாட்டுக்கு நிறைவளம் கொடுக்கும் சரயு நதி மாய்ந்துவிட்டனவோ என எண்ணும்படி வயல்கள், ஏறி, குளங்கள் கெட்டழிந்து கிடந்தன.

வயலில் - உழுவோர் இல்லை. பயிருக்கு நீர் பாய்ச்சலில்லை. மலர்கள் பறிப்பாரில்லாமல் உதிர்ந்து கிடந்தன. போக்குவரத்தில்லாமல் தெருக்கள் பாழாய்க் கிடந்தன. அலங்காரக் கலசங்கள் அமைந்த மாட மாளிகைகளில் தோரண மாலைகளைக் கட்டி வைத்திருப்பார்கள். நாட்டிய மண்டபங்களிலிருந்து பாடலோ, குழலோசையோ வந்த வண்ணமாயிருக்கும். இப்போது அவை ஒன்றுமில்லை.

பரதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. விசாரிக்கப் போனால் மனம் வருந்தும்படியான செய்தி ஒன்றைக் கேட்க நேரிடும்போலிருக்கிறதே என்று பயந்து பெருமூச்சு விட்டான்.

தேர் கோட்டை வாயில் வந்து சேர்ந்தது. தேரிலிருந்து விரைவாக இறங்கி பரதன் கோசலை அரண்மனையை நோக்கி நடந்தான். அப்போது கைகேயி தாதியை அனுப்பி பரதனைத் தன்னிடம் அழைத்து வரும்படி சொன்னாள். பரதன் கைகேயி யிடம் போய் அவளை வணங்கினான். அவனுக்குத் தந்தையை வணங்க வேண்டும். இராமனைக் காண வேண்டும் என்ற ஆசை. அதனால், கேகய நாட்டி லுள்ள தாய்மார், தந்தை, தங்கைமார் மற்றவர் களும் சுகமாயிருக்கிறார்களா என்று கேட்டதற்கு சுருக்கமாக 'ஆமாம்' என்று பதிலளித்துவிட்டு, பரபரப்பாக, "சக்கரவர்த்தி எங்கே இருக்கிறார்; சொல்லம்மா" என்றான்.

கைகேயி பரதனைத் தழுவிக்கொண்டு, 'அப்பா, வானவர்களை வென்ற உன் தந்தை தேவர் கைதொழ வானகம் எய்தினார்; நீ வருந்த வேண் டாம்" என்று கூறினாள்.

வீசி யெறிந்த கல்லைப்போல் வேகத்தோடு தன்னுடைய காதுகளில் விழுந்த அந்த சொல்லைக் கேட்டவுடன் பரதன் உணர்விழந்துவிட்டான். பூமியில் விழுந்து, பெரு மூச்சுவிட்டு, பெண்களைப் போலப் புலம்பத் தொடங்கினான். துயரை மாற்ற வேண்டும் என்று பக்கத்திலிருந்தவர்கள் கொஞ் சம் தேற்றினார்கள்.

பரதன் "எனக்கு இனி தந்தை, தாய், தெய்வம் எல்லாம் இராமனே. அண்ணன் எங்கே இருக்கிறார். அந்தமில் பெருங்குணத்து இராமனைப் பார்த்து அவருடைய பாதங்களில்வீழ்ந்து வணங்கிடும்வரை என் சிந்தையில் நிறைந்திருக்கிற அந்தக் கொடும் துயரம் என்னை விட்டு அகலாது" என்று நடக்க,

கைகேயிக்கு மிகுந்த கோபம் உண்டாகி, "அவன் தன் மனைவியுடனும் தம்பியுடனும் காட்டுக்குப் போய்விட்டான்" என்று சொன்னாள்.

தந்தை இறந்தார் என்ற சொல்கூட பரதனுக்கு அத்தனை துயரை உண்டாக்கவில்லை. பூமியில் பிறந்தவர் அனைவரும் ஒருநாள் இறந்துபோவது இயற்கையின் நியதி. மனிதனால் அதை மாற்ற முடியாது என்று கொஞ்சம் ஆறுதல் அடைந்திருந் தான். ஆனால், முன்னவன் மாதவம் பூண்டான் என்று ஆங்காரத்தோடு அழுத்தமாய் கைகேயி சொன்னதைக் கேட்டு, விம்மிக்கொண்டிருந்த பர தன் வாய்விட்டு அலறியழுது, "அண்ணன் காட் டுக்குப் போனது தந்தை இறப்பதற்கு முன்னரோ, பின்னரோ!" என்று கேட்டான்.

கைகேயி நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொன் னாள். தந்தை இறந்துவிட்டார். தன் அன்னையின் கொடுமையினால், அதுவும் தனக்காக தன் உயிர் போன்ற தமையன் கொடும் வனம் சென்றான் என்று கேட்டதும் பரதனுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது.

நின் மகன் ஆள்வான்; நீ இனிது வாழ்வாய் நிலமெல்லாம் உன் வசமாகும் என்று நினைத்தாயா? சொன்ன சொல் தவறாதவர்; சத்தியத்துக்காக உயிரை இழக்கத் துணிந்தவர் என்பது தெரிந்தே இந்த சூழ்ச்சி செய்தாய்! உன் கணவன் உயிரைக் குடித்துவிட்டாய்! என்னுடன் பிறந்தவனை இலை யும் காயும் புசிக்கும்படி ஆரணியத்துக்கு அனுப்பி விட்டாய்! 'ஆளவும் உளன் ஒரு பரதன்' என்னும் அழியாத பழியைத் தேடித் தந்துவிட்டாய்! இன் னும் நான் உயிரோடு இருக்கிறேன்! நான் ஒழிந்து

போனல் எல்லாருக்குமே ஏற்பட்ட தாங்கமுடியாத துயரம் தீர்ந்துவிடும். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம், காரணமாக இருந்த உன்னைக் கொல்லாமல் நானும் சாகாமல் அன்புள்ளவன் போல அழுகிறேன். பெரியவர்கள்—பெருங்குடி மக்கள் என்ன நினைப்பார்கள்? பரதன்கூட உடந்தைதான். அவன் அரசை ஆளுவான் என்றல்லவா சொல்லுவார்கள். வீண் பழி—இரதம் ஒன்று ஊர்ந்து பார் இருளை அகற்றும் சூரியனைப்போல் விளக்கம் பெற்று வந்த இரகுவம்சத்துக்கு என்னால் ஏற்பட்டுவிட்டதே. இப்பழியை மாற்றியமைக்க இடம் உண்டா? நானே காட்டுக்குப் போகிறேன். நீ உயிரை விட்டுவிடு. உலகத்துக்கு நல்லவளாகயிருப்பாய்!' என்று உள்ளத்தில் எப்படியெல்லாம் வார்த்தைகள் பொங்கினவோ அப்படியே பரதன் வெளியிட்டான். பின்னர் கொடுமை செய்த அன்னையின் முகத்தையும் காண வெறுத்துக் கோசலை இருந்த இடம் சென்றான்.

தாயைப் பிரிந்த கன்றுபோல் கதறிக்கொண்டு வந்த பரதன் கோசலையைப் பார்த்ததும் அவளுடைய பாதங்களில் தரை வெடித்துக்கிழியும்படியாக விழுந்து அன்னையால் விளைந்த இழப்பையும் இன்னலையும் சொல்லி யழுதான். காட்டுக்குச் சென்ற இராமனே திரும்பி வந்துவிட்டதுபோலக் கோசலைக்குத் தோன்றிற்று. தன் பாதத்தில் வந்து விழுந்த மைந்தனைத் தூக்கியெடுத்து ஆறுதல் கூறினள். 'உன்னுடைய குலத்து மூதாதை யார் உனக்கு ஈடானவர்? மன்னர் மன்னவா!' உன் தந்தை இறந்து ஏழு நாட்கள் ஆகின்றன. பிள்ளை

செய்ய வேண்டிய கடமை யாதோ அதை நீ செய்'' என்று சொன்னாள்.

அப்போது வசிட்ட மா முனிவர் அங்கு வந்தார். பரதன் அவர் காலில் விழுந்து புலம்பினான். வசிட்டர் பரதனை மார்பில் அணைத்துக்கொண்டு ஒரு வார்த்தையும் சொல்ல முடியாதபடி துயரில் மூழ்கினார். சிறிது நேரத்துக்குப் பிறகு, 'நடக்க வேண்டிய காரியம் நடந்தது. இனி புலம்புவதாலும் அழுது புரண்டாலும் ஆகவேண்டுவதென்ன?'' என்று தேறுதல் சொன்னார். வசிட்டர் ஒருவாறு பரதனைத் தேற்றி, இறந்துபோன மன்னனுக்கு வழக்கப்படி செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தார்.

சில நாட்கள் சென்றன.

வசிட்ட மா முனிவர், சுமந்திரர், நகரத்தலைவர்கள், சேனைத் தலைவர்கள் எல்லாரும் பரதனிடம் வந்து, பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய மன்னன் சுவர்க்கம் சென்றுவிட்டான். இராம இலக்குவனர்கள் வனத்திலிருக்கிறார்கள். மன்னன் இல்லாமல் இருக்கிறது, இந்த மாநிலம். அரசன் என்பவன் ஒருவன் இல்லையானால் உலகத்தில் தொல்லைகளும் துயரங்களும் பெருகிவிடும். எக்காலத்திலும் எந்த நாட்டிலும் மக்களைக் காக்கிற தலைவன் ஒருவன் இருந்து தீரவேண்டும். ஆதலால், தசரத மன்னன் இந்நாட்டை உனக்குத் தந்திருக்கிறார். நீ ஆளுவாய். நீதியைக் கடைப்பிடித்து தருமத்தைக் காப்பாற்றுவாய்!' என்று சொன்னார்கள்.

அதைக் கேட்ட பரதன் மனம் திகைத்து வருந்தினான். 'அண்ணனைக் கண்டு எப்படியாகிலும் அழைத்து வந்து மகுடம் சூட்டுவேன். என்னை

ஈன்றெடுத்தவள் செய்கையினுல் ஏற்பட்ட இழுக்கை மாற்றுவேன். இதைச் செய்ய நான் கடமைப்பட்ட வனு இல்லையா என்பதை பெரியவர்கள் எடுத்துச் சொல்லி விளக்குங்கள். இராமனுக்கு நீங்கள் முடி சூட்டாமற் போனுல் காட்டுக்கு நானும் தவம் செய்யப் போகிறேன். பிறகு உங்கள் விருப்பம்போல் செய்து கொள்ளுங்கள்!' என்று சொல்லிவிட்டு, தம்பியை அழைத்து, இந்நகர் அரசனுக இருக்க வேண்டிய இராமனை இங்கு அழைத்து வருவதற்கு நகர மக்கள் எல்லோரும் புறப்பட பேரிகை அடிக்கச் சொல். படைவீரர்களும் அணிவகுத்து வரட்டும்'' என்று கட்டளையிட்டான்.

பேரவையில் கூடியிருந்தவர்கள் பரதனது மனவுறுதியை அறிந்ததும் ஆர்வத்தோடு 'வாழிய நின் புகழ்' என்று வாழ்த்திஞர்கள்.

முரசு ஒலித்தது. பேரிரைச்சலிட்டு எழுந்தது பெரும்படை. மக்களுடைய மனதில் மண்டிக் கிடந்த சோர்வும் துயரமும் தொலைந்துபோயிற்று. பெருமகிழ்ச்சியடைந்து ஆரவாரம் செய்தார்கள். வெள்ளம் போல அரண்மனை முன்னுல் திரண்டு வந்துவிட்டார்கள்.

உற்சாகமும் 'இராமன் வந்தேவிட்டான்' என்கிற உணர்ச்சி பெற்றும் எல்லாரும் கிளம்பிஞர்கள். சேனைகளெல்லாம் ஆர்வத்துடன் புறப்பட்டன. அமைச்சர்கள், சேனைத்தலைவர்கள், வேதியர்கள், தாய்மார்கள் யாவரும் கம்பீரமான யானைகளிலும் குதிரைகளிலும் தேர்களிலும் ஆரவாரத்துடன் புறப்பட்டார்கள். பரதனும் புறப்பட்டான். அண்ணன் எப்படி வனத்துக்குப் போனுன் என்று பரதன் கேட்டான். ஏறிச்செல்ல தேர்,

குதிரை, யானை எல்லாம் இருந்தபோதிலும் காலி ஞல் நடந்துதான் போனுன் என்ருர்கள். பரதனும் அதுபோல நடந்தான் சென்ருன்.

இப்படி நடந்து, அணிதேர்ப் புரவி ஆட் பெரும் படையோடு பரதன் கங்கைக் கரைக்கே வந்துவிட்டான்.

ஐந்து பேர்

கங்கை நதியில் ஓடம் விடுபவன் குகன். அவன் ஆயிரம் படகுகளுக்கு அதிபதி. கங்கைக் கரையிலிருந்த சிருங்கி பேரம் என்னும் நகரத் தலைவன்.

அவன் சில நாட்களுக்கு முன்னர்—செந்தாமரை போன்ற கண்களையுடைய இராமனை முனிவர்கள் எதிர்கொண்டு வரவேற்று துதித்தார்கள் என்பதைத் தன்னுடைய ஆட்கள் சொல்லக் கேட்டு, ஏதோ நெடுநாளாய்க் காணமல் போன பொருளைக் கண்டவன் போல், தன்னுடைய பரிவாரங்களுடன் தேனும், மீனும் முதலான மரியாதைப் பொருள் கொண்டு காண வந்தான்.

வேர்வை ஊற்றிக் கொண்டிருக்கும் உடம்பும் தன்னுடைய கறுத்த தலைமயிர் பூமியில் புரளும்படியும் விழுந்து வணங்க, அன்புருவான குகன் கண்ணனை (இராமனை) கண் குளிரப் பார்த்துக் களித்துக் கள்ளும் மாமிசமும் மீனும் உண்ட நாற்

றம் வீசும் வாய் திறந்து இடி முழக்கம் போன்ற ஓசையுடன் பணிவோடு, "உண்பதற்குச் சுவையாக தேனும் மீனும் கொண்டு வந்திருக்கிறேன், அடியேன். ஏற்றருள வேண்டும்" என்ருன்.

இராமன் அதைக் கேட்டு குகனைத் தழுவிக் கொண்டு அங்கிருந்த முனிவர்களைப் பார்த்துச் சிரித்து விட்டுச் சொன்ஞன். 'ஒருவன் உள்ளன்பிஞல் தனக்கு உவந்ததாயும் கிடைப்பதற்கு அரியதாயும் உள்ள ஒரு பொருளை அன்புக் காணிக்கையாகக் கொண்டு வந்தால், அது அமுதினும் மேலானதாகப் பாராட்டத் தகுந்தது. ஏற்றுக் கொள்ளத் தக்கதே."

பின்பு குகனுடன் சிறிது நேரம் பேசியிருந்தான். "இன்று நாங்கள் இவ்விடத்தில் இருக்கிரேம். நாளை விடியற்காலை வேளையில் அலை கடலோடு கூடிய இந்த அகலமான கங்கை நதியைக் கடந்து போக வேண்டும். அதற்காகப் பெரிய ஓடம் ஒன்றை ஏற்பாடு செய்" என்று கேட்டுக் கொண்டான் இராமன்.

"அயோத்தி எப்படியோ அப்படியே இந்த தேசமும் உங்களுடையதாகும். இங்கேயே ஒரு குறையுமில்லாமல் பதிஞன்கு வருடங்கள் இருக்கலாம். உங்களை என்றுமே விட்டு நீங்காமல் நானும் என்னுடைய ஆட்களும் உங்களுடைய காலடியிலிருந்து தொண்டு செய்வோம்" என்ருன் குகன்.

தாயாரிடம், சத்தியத்தைக் காப்பாற்ற நான் முற்றும் துறந்து சடைமுடி தரித்துக் கொண்டு, காய் கனிகளை உணவாகக் கொண்டு கானகத்தில் வாசம் செய்து, புண்ணிய நதிகளில் நீராடி, பதி

ஞன்கு ஆண்டுகள் கழித்து விட்டு அதன் பிறகே அயோத்திமா நகரத்துக்குத் திரும்பி வருவேன் என்று சொல்லி, விடை பெற்று வந்திருக்கிறேன். என்னிடத்தில் மேலான அன்பும் மதிப்பும் வைத் திருப்பதால் உடனிருக்க வேண்டும் என்று சொல்லுகிருய். அன்புருவான குகனே, நீயும் எனக்குத் தம்பிதான். இது வரை நால்வர் சகோதர ராய் இருந்தோம். இன்று முதல் உன்னேடு ஐந்து பேராஞேம். வனவாசம் முடிந்து திரும்பி வரும் போது உன் இடத்திற்கு வருகிறேன்" என்ருன் இராமன்.

இராமனுடைய மனதை அறிந்து கொண்டு கங்கை நதியைத் தாண்டிச் செல்ல பெரிய படகு ஒன்றைத் தயார் செய்தான் குகன். விடிந்ததும் கங்கை நீராடி, மாமுனிவர்களை வணங்கி. இராமன், சீதை, இலக்குவனன் ஆகிய மூவரும் ஓடத்தில் ஏறினுர்கள். குகனிடம் வேகமாகப் படகை விடும் படிச் சொன்ஞன் இராமன். அலையோடுகூடிய அகலமான அந்த ஆற்றில் படகும் அன்னம் போல் சென்று அக்கரை சேர்ந்தது.

குகனை விட்டுப் பிரிந்த இராமன், சீதை, இலக்குவனன் ஆகிய மூவரும் சித்திர கூட பர்வ தத்திற்குச் செல்லும் வழியைக் கேட்டறிந்து கொண்டு காட்டுக்குள் நடந்து சென்ருர்கள்....

அந்த நினைவு வர குகன் மிகவும் துக்கப் பட்டிருந்தான். அப்போது அறுபதினுயிரம் படை யணிகளொடு கங்கையாற்றின் கரையோரமாக வந்த பரதன் களைப்பாற தங்கியிருந்தான். அதை யறிந்த குகன் இவர்கள் இராமனைக் கொல்ல வரு கிருர்கள் என்றெண்ணி தன்னுடைய ஆட்களைக்

கூப்பிட்டு 'அவர்களை அங்கேயே தடுத்து விட வேண்டும்' என்று எச்சரித்தான்.

கோபமாகச் சிரித்து, கண்களில் நெருப்புப் பொறி பறக்க, 'பாவமும் பழியும் பகையும் உறவும் மன்னர்கள் எண்ணிப் பார்ப்பதில்லையா? அண்ணன் என்றும் பாராமல் பெரும் படை தன்னைப் பின் தொடர்ந்து வர கைகேயியின் மகன் உரிமையில்லாத உலகம் எப்போதும் தனக்காக, இப்போது இராமனைக் கொல்லவும் வந்திருக்கிறான். இராமனுக்கு நானும் ஒரு தம்பிதானென்று அவர் சொன்னது ஒரு சொல்லல்லவா?' என்று வில்லைப் பிடித்துக் கொண்டு தென்கரை ஓரமாக வந்து நின்றான் குகன். அவனுடைய ஆட்களும் ஒன்றாய்த் திரண்டு ஆரவாரம் செய்து கொண்டு கைகளில் வில்லேந்தி வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

அதைப் பார்த்த சுமந்திரர் பரதனிடம், "அதோ நம்முடைய நண்பன் குகன். இராமனிடம் அளவிலாத அன்பு கொண்டவன். நம்மை வரவேற்க வேண்டுமென்னும் விருப்பத்தினால் எதிரே வந்து அக்கரையில் நிற்கிறான்' என்று குகனைப் பற்றியும் அவனுடைய சேவையின் பெருமையைப் பற்றியும் சொன்னவுடன் "குகன் எனக்கும் தமையன்" என்று உறவு கொண்டாடி விரைவாய் நடந்து கரையோரமாய்ப் போய் நின்றான் பரதன்.

இதற்குள் குகன் நதியைக் கடந்து வந்து பரதனைத் தொழுதான். பரதனும் குகனை வணங்கினான். தந்தை பிள்ளையைக் கண்டு களிகூர்ந்து தழுவுவது போல ஒருவரையொருவர் தழுவினர்.

குகன் மரவுரிதரித்து, வெளுத்துப்போன முகத்துடன், சோகமே உருவாக நின்றிருந்த பரத

னைப் பார்த்தான். பரதனைப் பார்த்தால் கல்லில் செதுக்கிய சிலை கூட அப்படியே கனிந்து விடும். இராமனைக் கொல்ல வரவில்லை. தந்தையையிழந்த தனக்கு இராமனே இனி தந்தை. இராமன் காலடியில் விழுந்து வேண்டி எப்படியாவது அயோத்திக்கு அழைத்துக் கொண்டு போகவே பரதன் வந்திருக்கிறான் என்பதை அறிந்ததும், "எம்பெருமான் பின் பிறந்தார் தவறு இழைப்பரோ!" என்று குகன் தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொண்டான். அவன் பரதனைப் பார்த்து "ஆயிரம் இராமரும் உனக்கு ஈடில்லை" இராமன் என்ன, இரகு குலத்தில் உதித்த எல்லா மன்னர்களுங்கூட உனக்கு இணையில்லை. பெருமை வாய்ந்த உன்னுடைய முன்னோர்களின் எல்லாப் புகழுக்கும் நீ உறைவிடமானாய்!" என்று சொல்லி மகிழ்ந்தான். பரதன் கேட்டுக் கொண்டதற்கிணங்க இராமன், சீதை, இலக்குவனன் ஆகிய மூவரும் அங்கு வந்த போது தங்கியிருந்த இடங்களைக் காட்டினான். பரதனும் அவனுடன் வந்த படைப்பெருக்கமும் கங்கையைக் கடந்து இராமனைக் காணவும் குகன் உதவி செய்தான்.

சித்திர கூடம்

இராமன், இலக்குவனன் சீதை, ஆகிய மூவரும் சித்திரகூட பருவதம் வந்து சேர்ந்தார்கள். மலையடிவாரத்தில், மந்தாகினி ஆற்றங்கரையில் கனிகளும் கிழங்குகளும் நிறைந்த வனத்தில் இலக்குவனன் மூங்கில்களை எடுத்து வெட்டி முகடு சேர்த்து, தேக்கு மரத்தின் அகன்ற இலைகளை மேலே மூடி, பூவோடு கூடிய நாணல்புற்களாலே கூரை வேய்ந்து, ஈர்க்கழிகளைச் செருகி செம்மண் சேறு பூசி, தண்ணீர் கொண்டு மெழுகி அழகாக ஒரு பர்ணசாலையைக் கட்டிமுடித்தான்.

அந்தப் பர்ணசாலைக்குள் இராமன் சீதையுடன் சென்று, இலக்குவனன் ஒருவனாகவே கட்டி முடித்த ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்து, "என்று கற்றனை நீ இதுபோல்?" என்று தம்பியைக் கட்டியணைத்துக் கண்ணீர் விட்டான். 'மிதிலை மன்னன் மகள் பூவைவிட மெல்லிய பாதங்கள் கல்லும் கானலும், கலந்துறவாடும் பெருங் காட்டில் நடந்தன !

தம்பி, ஒப்பற்றஉன் கைகள் அழகான—வசதியான இந்தப் பர்ணசாலையை அமைத்து விட்டன! குன்று போலத் திரண்ட தோளினுய்! சக்கரவர்த்தியாகிய தந்தை சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவனுக மகுடத்தையும் மாநிலத்தையும் துறந்து தருமத்தைப் பாது காத்து சூரியனைப்போல் பிரகாசிக்கும் புகழைச் சூடினேன் என்று சொல்லுகிருர்கள். அதெல்லாம் ஒன்றுமில்லை. துன்பத்தை உனக்குக் கொடுத்தேன்.'' என்ருன் இராமன்.

அந்த இடத்தில் மூவரும் இயற்கை யன்னை அள்ளித் தெளித்திருந்த கோல முழுவதையும் கண்டு களித்தும் காய்கனிகளை உண்டும் கவலையின்றி வனவாச வாழ்க்கை நெறியைக் கடைப் பிடித்து வசித்து வந்தார்கள்.

அப்படி இருந்து வந்த வேளையில்—புழுதி கிளம்ப, நாற்பெரும் படை சித்திரகூடம் நோக்கி வருவதைப் பார்த்தான் இலக்குவனன். சேனையோடு பரதன் வருவது தெரிந்தது. தாய் பெற்ற வரத்தால் தான் பெற்ற பதினுன்கு ஆண்டின் ஆட்சி போதாதென்று, இராமனைப் படையெடுத்து வென்று, அவன் அரசுரிமையைக் கொண்டு என்றும் ஆள ஆசைப்பட்டு படைவெள்ளத்தை அழைத்து வருகிருன் என்று எண்ணினுன் இலக்குவனன். கோபம் பொங்க, குன்றின் உச்சியிலிருந்து குதித்தோடி, இராமனிடம் சென்று,

"அண்ணலே! உன்மீது படையெடுத்து வருகிருன் பரதன். தன்னந்தனியாக இருந்தாலும் நான் ஒருவனே பரதனையும் அவன் படைகளையும் அழிப்பேன். எவ்வளவு படைவரினும் என்னொருவனுக்கு ஈடாகாது. இன்னும் சிறிது நேரத்தில், பரதனையும்

அவனுடைய படை வீரர்களையும் கொன்று, அவர் களின் உடம்புகளைப் பெருங் குவியலாககுவிப்பதை யும், இறக்கின்ற யானைக் கூட்டங்களையும் உடை படும் தேர்களையும் குதிரைகளின் குடல்களை அலைத் துத் தள்ளும் இரத்த ஆறுகளையும் நீ பார்க்கப் போகிறாய்! மைபோலும் கரிய மனமுடைய கைகேயி நமக்குச் செய்த கொடுமைக்கு அவள் மைந்தன் இன்று! அடிபட்டுத் தாளும் தோளும் அறுபட்டு விழ நம்முடைய துன்பங்கள் அழிய கூரிய கொடுங் கணைகளை நான் செலுத்தக் காண் பாய்!'' என்று சொன்னான்.

'தம்பி! உன்னுடைய வீரமும் வில் திறனும் எனக்குத் தெரியாததா? பதினான்கு உலகங்களை யும் நீ கலக்க நினைத்தால், யாரால் அதைத் தடுக்க முடியும்? ஆனால், நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்: நம் குலத்து உதித்தவர் எல்லாரும் எந்த விதமான குற்றமும் இல்லாதவர்கள். 'அறம் வெல் லும்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள். நன்னெறியை விட்டு நடந்தவர் கள் இல்லை. நம் குலத்திற் பிறந்த பரதனின் நற் குணங்கள் வேதங்கள் எடுத்துச் சொல்லும்உயர்வு பெற்றவை. பரதன் நம்மீது படையெடுத்துவர— இங்கே, மறைவாக ஆட்களைத் திரட்டிக் கொண்டி ருக்கிறோமா? அயோத்திக்கு நான் மன்னனாக குறுக்கு வழியில் ஏதேனும் திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறோமா? வன வாசம் வந்த போது பரதன் அயோத்தியில் இல்லை. கேகய நாட்டி லிருந்து வந்த பரதன் இதைக் கேள்விப்பட்டு நம் மைப் பார்த்து விட்டுப் போக வருகிறான். அவனு டன் நம்மிடத்தில் அன்புள்ளவர்களும் வருகிறார்

கள். அவ்வளவுதான். அவசரமும் ஆத்திரமும் தேவையில்லை. அவனைத் தந்தையும் அனுப்பியிருக்கலாம். தருமத்துக்கு அறிவாகவும், நீதிக்கு அச்சாகவும் உள்ள பரதனை நீ இப்படிச் சொல்லலாமா ?'

இவ்விதம் இராமன் சொல்லி, இலக்குவன் சீற்றத்தை ஆற்றினான். அப்பொழுது சேனையை, தொலைவில் நிறுத்திவிட்டு சிரமேற் குவித்த கரமுடையவனாய், கண்களில் நீர் பெருக, ஒன்றும் பேச முடியாமல் "அண்ணா!" என்று கதறிக் கொண்டு பரதன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்து இராமன் காலடியில் விழுந்ததை இலக்குவனன் பார்த்து வெட்கத்தால் உடல் குறுகிப் போனான். கொஞ்ச நேரத்தில் சுமந்திரரும் தாய்மாரும், குகனும் வந்து சேர்ந்தார்கள். எல்லாரும் மெலிந்து, நிறம் மாறிப் போய் இருந்தார்கள்.

மைந்தனலாது உயிர் வேறிலாத மன்னன் மாண்டான் என்று சொல்லக் கேட்ட இராமன், 'நந்தா விளக்கு அணைய நாயகனே நானிலத்தோர் தந்தாய்; தனி அறத்தின் தாயே, தயாநிதியே! எந்தாய், இகல்வேந்தர் ஏறே இறந்தனையே! அந்தோ! இனி வாய்மைக்கு ஆருளர்?" என்று பூமியில் விழுந்து புரண்டழுதான். வசிட்டமா முனிவர் இராமனைத் தாங்கிக் கொண்டு "மன்னுயிர்க்கு இறத்தலும் பிறத்தல் போல் இயற்கை என்பது எல்லாம் அறிந்த உனக்குத் தெரியாததல்லவே!" என்று ஆறுதல் கூறினார். மாமிமார்களைக் கட்டிக் கொண்டு கதறியழுத சீதையையும் தேற்றினார். பிறகு, நீர்க்கடனாற்ற ஆற்றுக்குப் போய் இராமன் இலக்குவனன், சீதை ஆகிய மூவரும் முழுகிவிட்டு பர்ண சாலைக்கு வந்தார்கள்.

பரதன் இராமனைப் பார்த்து, 'அயோத்திக்கு வந்து மகுடம் சூட்டிக் கொண்டு ஆட்சி செய்ய வேண்டும்' என்று பிடிவாதமாக அழைத்தான். தாய் செய்த கொடுமையும் தந்தை துயரமும் தீர இரகு வம்சம் மீள அதுவே வழி என்றான்.

வசிட்டர், சுமந்திரர், தாய்மார் முதலானவர்களும், இராமன் அயோத்திக்கு வந்து ஆள வேண்டும் என்று சொன்னார்கள்.

பரதன் உறுதியையும் உள்ளன்பையும் பார்த்து இராமன், 'வெற்றி வீரா, நம் தந்தை கட்டளையிட பதினான்கு வருடம் வனத்தில் வாசம் செய்ய வந்திருக்கிறேன். அதுவரைக்கும் நீ ஆள், என் ஆணையால். என் வார்த்தையை மறுக்காமல் நான் சொன்னபடி செய், துயரப்படாதே'' என்று சொன்னான்.

அதைக் கேட்ட பரதன் அழுது, 'அண்ணலே, இந்தப் பதினான்கு வருடமும் கழிந்தவுடனே அயோத்தி மா நகருக்கு வந்து அரசு புரிய வில்லை என்றால் உன் ஆணையாகச் சொல்லுகிறேன், அக்கினி வளர்த்து நான் அதில் விழுந்து சாவது நிச்சயம்'' என்றான்.

பரதனுடைய அன்பில் உருகி, பேச இயலாமல் அவனை அணைத்துக் கொண்டு, 'அப்படியே ஆகட்டும்' என்றான் இராமன். பரதன் இராமனுடைய இரண்டு பாதுகைகளையும் வணங்கிப் பெற்று, தலைமேல் வைத்துக் கொண்டுத் தாய்மார், முனிவர்கள், சுற்றத்தினர் படை வீரர்கள் எல்லாரும் பின்னால் வர அயோத்தியை நோக்கிச் சென்றான்.

பரதன் திரும்பிப் போனது முதல் இராமனுக்குச் சித்திரக்கூடத்தில் இருக்கப் பிடிக்கவில்லை.

தாய்மார்களும் தம்பியும் வந்து தன்னைச் சந்தித்துப் பேசியது முதல் மனதில் நிம்மதியில்லாமல் போய்விட்டது. மனதில் எழும் உணர்ச்சிகளுக்கு உள்ளாகித் தவித்ததால், பற்றற்ற தன் மனதில் பந்த பாசங்கள் மீண்டும் தலைதூக்குவதை அறிந்தான். அதனால், அதை மாற்ற—மறக்க தம்பியுடனும் சீதையுடனும் சித்திரகூடத்தை விட்டுப் புறப்பட்டு தெற்குத் திசையிலிருந்த தண்டகாரணியம் என்னும் பெருங்காட்டுக்கு நடந்து போனான்.

வள்ளுவர் பண்ணை 137, பிராட்வே சென்னை-1

Wrapper Printed at
Commercial Printing & Publishing House Madras-1.